

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 112 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 15 – வெள்ளிக்கிழமை 01 டிசம்பர் 2023 – வெளியீர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 112: Thiruvalluvar Year - 2054 - Karthigai 15 - Friday 01 December 2023 - Dak 12 Pages ₹ 5.00


## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (9)

# வெள்ளை இருட்டை விலக்க வந்த கறுப்பு நிலா!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.17 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

1990ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11ஆம் நாள் காலை திருச்சியில் திராவிட முன்னேற்றக் கழக மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மகிழ்ச்சி பொங்கிட துள்ளிக் குதித்துக் கொண்டு மேடையிலிருந்த ஒலி பெருக்கியின் முன்னால் நான் வந்து நின்றேன். அலைகடலெனக் குழுமியிருந்த தமிழ் மக்களைப் பார்த்துச் சொன்னேன்.

**"தமிழ்ப் பெருங்குடி மக்களே!**

**கழக உடன்பிறப்புக்களே!**

**எல்லையற்ற மகிழ்ச்சியை ஏந்தி வந்துள்ள செய்தி!**

**27 ஆண்டுக் காலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தென்னாப்பிரிக்கா நாட்டின் கறுப்பர் இனத்தலைவன் நெல்சன் மண்டேலா, விடுதலை செய்யப்பட்டு விட்டார் - இந்த மகிழ்ச்சியைக் கொண்டாட மாநாட்டுப் பந்தலில் குழுமியிருப்போர் அனைவரும் எழுந்து நின்று தொடர்ந்து கையொலி செய்யுங்கள்!"**

இந்தக் கருத்தமைந்த என் வேண்டுகோள் கேட்டு, மண்டேலா விடுதலையால் மகிழ்ச்சியில் ஆழ்ந்தோர், மாநாட்டில் "நான் போதும் போதும்" என்று கையமர்த்தும் வரையில், கடலில்லா திருச்சியில் கடலலைகளின் முழக்கத்தைச் செய்தனர்.

உத்தமர் காந்தியடிகள், தென்னாப்பிரிக்காவில் மனித உரிமைப் போர் நடத்தியபோதே நமது தென்னக மக்களின் ஆதரவையும் - அனுதாபத்தையும் பெற்றார் என்பதுபோல, மண்டேலா நடத்திய போராட்டத்தின்போதும் - தென்னிந்தியாவின் தமிழ் மக்களின் அனுதாபம் அவரது இயக்கத்திற்கு இருந்தது என்பதை இந்த நிகழ்ச்சி உலகத்திற்கு எடுத்துக்காட்டியது.

உலகமே அந்த ஒரு மனிதனின் சிறை வாசத்தைப் பற்றித்தான் அப்போது பேசிக் கொண்டும், கண் கலங்கிக் கொண்டுமிருந்தது. காந்தியடிகள் நடத்திய அந்தப் போராட்டத்தில் இந்திய நாட்டின் தமிழ் நிலத்துக்குச் சொந்தக்காரர்களான நாகப்பன், நாராயணசாமி என்ற வாலிபர்களும், தில்லையாடி வள்ளியம்மாள் என்ற பெண்மணியும், சிறை புகுந்து, உடல் நலிந்து, உயிர் விட்டார்கள் என்பது வரலாறு - அந்த வரலாறு என்றும் நினைக்கப்படும் வண்ணம், கழக ஆட்சியின் கைவண்ணத்தால் உருவான அரிய சின்னங்கள், இன்றும் அழியாச் சின்னங்களாக தஞ்சை தில்லையாடியில் விளங்குகின்றன. தென்னாப்பிரிக்காவிலும் கூட நமது இந்தியப் பிரதமராக நமது அணியின் நாயகராக விளங்கிய திரு. குஜ்ரால் அவர்கள், 1997ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் நாள், அந்தத் தியாகிகளின் நினைவிடம் சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினார் என்பது உணர்ச்சிமிக்க ஓர் நிகழ்ச்சியாகும்.

அந்தத் தென்னாப்பிரிக்காவில் கறுப்பர் இன விடுதலைக்காக, வெள்ளையர் ஆதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி, 27 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நெல்சன் மண்டேலா; பின்னர் விடுதலைக்குப் பிறகு, அந்த நாட்டின் அதிபராகப் பொறுப்பேற்றது பற்றியும் - அவரது துணைவியர்கள் அவரது தியாகப் போருக்குத் துணை நின்றது பற்றியும் - அவரின் வாழ்க்கை வரலாறு கூறும் ஏற்றத் தாழ்வுகள் பற்றியும் - எதுவும் விளக்க வேண்டிய அவசியமின்றி, அந்த மாவீரனின் வைர நெஞ்சம் - அவன் வளர்ந்த சூழ்நிலை - ஏற்றுக் கொண்ட அடக்குமுறை - கட்டிக்காத்த தன்மான உணர்வு - வழுக்கல் இல்லாத பொதுவாழ்வு -

**கலைஞர் கடிதம்**

இவையனைத்தும் அவனது இளமைக் காலத்திலேயே வாய்க்கப் பெற்றவனாக இருந்ததை எண்ணி, வியப்பு அடைகிறோம் - அவ்வழி வளரும் இளைஞர்கள் எவராயினும், வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம்.

1918 ஜூலை 18 மண்டேலா பிறந்த நாளாகும் - கறுப்பின மக்களிடையே நெல்சன் மண்டேலா குடும்பத்தினர் ஃகோஸா இன வகையைச் சேர்ந்தவர்கள். அக்குலத்தின் தலைவராக மண்டேலாவின் தந்தை இருந்தார். அவர் பெயர் ஹென்றி கான்யிஸ் வா காட்லா என்பதாகும். அவருக்கு நான்கு மனைவிகள் - பனிரெண்டு குழந்தைகள் - மூன்றாம் மனைவியின் மகன்தான் நெல்சன் மண்டேலா.



33- வயதில் இளைஞர் அணி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நெல்சன் மண்டேலா!

குடிசையில் பிறந்து, குடிசையில் வளர்ந்தவர் - குடும்பத்துக்கு மொத்தம் மூன்று சின்னஞ்சிறு குடில்கள் - ஒன்று சமைத்திட! ஒன்று பொருள்களை சேமித்திட! ஒன்று உறங்கிட! பாய்களில்தான் படுக்கை அவர்கள் அனைவருக்கும்!

ஆரம்ப வயதில் ஆடுமாடுகள் மேய்க்கிற வேலை மண்டேலாவுக்கு - அவர் அன்னை எழுதப் படிக்க தெரியாதவர் - ஆயினும், மகனைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பி வைத்தார்.

1928ஆம் ஆண்டுக்குள் மண்டேலாவின் தந்தை இறந்து விடவே, அந்தத் தந்தையின் மைத்துனரான "ஜோன்கின்டாபா" என்பவர், மண்டேலாவின் படிப்பைக் கவனித்துக் கொண்டார்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## சென்னையில் பெய்துவரும் கனமழை மற்றும் வங்கக்கடலில் உருவாகியுள்ள

# புயல் சின்னம் - அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் ஆய்வு!

**சென்னை, டிச.1-**

**சென்னையில் பெய்து வரும் கனமழையையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் வங்கக்கடலில் உருவாக உள்ள புயல் சின்னம் காரணமாக மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (30.11.2023) சென்னை மாநகரில் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்ற எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், வங்கக் கடலில் உருவாகவுள்ள புயல் காரணமாக மேற்கொள்ளப்பட வேண்டிய மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும் பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டடத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

வடகிழக்கு பருவமழை 21.10.2023 அன்று தொடங்கியதிலிருந்து, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது.

**கனமழையையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு.**





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.11.2023) சென்னை, ரிப்பன் மாளிகை, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்ற எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் மீட்புப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, ஆ.ராசா எம்.பி., துணை மேயர் மு.மகேஷ் குமார், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று சென்னை, ரிப்பன் மாளிகை, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்ற எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் மீட்புப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, மழைநீர் வெள்ள பாதிப்பு தொடர்பாக கட்டுப்பாட்டு மையத்தை தொடர்பு கொண்ட பொதுமக்களிடம் தொலைபேசி மூலம் உரையாடி அவர்களது கோரிக்கைகளை கேட்டறிந்து, அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், ரிப்பன் மாளிகையில் தயார் நிலையில் உள்ள தமிழ்நாடு பேரிடர் மீட்பு குழுவினரை முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்து, மீட்பு உபகரணங்களையும் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்படும் பொதுமக்களுக்குத் தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர் மற்றும் மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுத்திட வேண்டும் என்றும்,

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 01-12-2023

# மணல் வீடு

**தி.மு.க. அரசுக்கு களங்கம் ஏற்படுத்த முடியுமா என்று பார்க்கிறது பா.ஜ.க. அரசு. அதற்கு அமலாக்கத் துறையைப் பயன்படுத்துகிறது. இரண்டு ஆண்டில் ரூ.4 ஆயிரத்து 730 கோடிக்கு மணல் எடுப்பில் முறைகேடு நடந்துள்ளதாக, வாய்க்கு வந்த ஒரு எண்ணிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது அமலாக்கத்துறை.**

**இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அந்த ஆற்றில் எவ்வளவு மணல் இருந்தது, இப்போது எவ்வளவு எடுக்கப்பட்டது என்று அவர்கள் எப்படிக் கணக்கிட்டார்கள்? ஆற்று மணலையே எண்ணும் வித்தை பா.ஜ.க. அரசுக்குதான் இருக்கிறது.**

**ரூ.4 ஆயிரம் கோடி, ரூ.5 ஆயிரம் கோடி என்று கட்டமைக்க நினைக்கிறார்கள். இப்படிச் சொல்லி விட்டு ஆதாரங்களைத் தேடப் போகிறார்களாம். இதன் பிறகுதான் மாவட்ட ஆட்சியர்களிடம் விசாரணை நடத்தப் போகிறார்களாம்? மாவட்ட ஆட்சியர்களிடம் விசாரணை நடத்துவதற்கு முன்னால் ரூ.4730 கோடி என்று எந்தக் கணக்கை வைத்துச் சொன்னார்கள்? சொல்கிறார்கள்?**

இந்த மாதிரியெல்லாம் மிரட்டல் விடுப்பது பா.ஜ.க.வின் தந்திரங்களில் ஒன்று. அதை பலமுறை பார்த்திருக்கிறோம்.

2016 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தனித்து போட்டியிட்டது. அப்போது பா.ஜ.க.வுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்ய பா.ஜ.க. அகில இந்தியத் தலைவர் அமித்ஷா தமிழகம் வந்தார். பட்டுக்கோட்டையில் 2016 மே 4ஆம் தேதி பிரச்சாரம் மேற்கொண்ட போது, “அ.தி.மு.க. ஆட்சியில் ரூ.20 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மணல் கொள்ளை நடந்துள்ளது. பாலில் ஊழல் செய்ய முடியும் என்று நிரூபித்த மாநிலம் தமிழகம்தான்” என்றார். அ.தி.மு.க. ஆட்சியின் 20 ஆயிரம் கோடி ரூபாய் மணல் கொள்ளையை மையமாக வைத்தே தமிழக பா.ஜ.க. நிர்வாகிகளும் பிரச்சாரம் செய்தார்கள். அதே அ.தி.மு.க.வுடன் கூட்டணிக்கு வவ்வால் மாதிரி தொங்கியதும் பா.ஜ.க.தான். 20 ஆயிரம் கோடிக்கு ஏதாவது வழக்குப் போட்டிருக்கிறார்களா? நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா? என்று தேடிப் பார்த்தால் ஏமாந்து போவீர்கள்!

2016 ஏப்ரல் 17ஆம் தேதி பா.ஜ.க.வின் பேஸ்புக் பக்கத்தில், “தாது, மணல், கிரானைட் மாஃபியாக்களால் தமிழகத்திற்கு ரூ.2.5 லட்சம் கோடி இழப்பு” என பிரச்சாரம் செய்யப்பட்டது. கடந்த ஏழு ஆண்டு காலத்தில் என்ன நடவடிக்கை எடுத்தார்கள். எதுவுமில்லை.

**2011 - 2021 பத்தாண்டு அ.தி.மு.க. ஆட்சியில் பொதுப்பணித் துறையை வைத்திருந்தவர்கள்தான் பன்னீர்செல்வமும் பழனிசாமியும். இவர்கள் இருவரையும் இடம் வலமாக வைத்து மேடையில் உட்கார்ந்து இருந்தவர்தான் பிரதமர் மோடி. இவர்கள் இருவரையும் சமாதானப்படுத்தி மீண்டும் அவர்கள் தோளில் பயணம் செய்யக் காத்திருக்கும் கட்சிதான் பா.ஜ.க.**

எடப்பாடிபழனிசாமி ஆட்சியில் அமைச்சராக இருந்த விஜயபாஸ்கர் குடும்பத்தினர் புதுக்கோட்டை மாவட்டத்தில் குவாரி தொழில் நடத்தினார்கள். 2017 ஏப்ரலில் விஜய பாஸ்கருக்குச் சொந்தமான 35 இடங்களில் வருமானவரித் துறை ரெய்டு நடத்தியது. அதில், புதுக்கோட்டையில் இருந்த விஜயபாஸ்கருக்கு வேண்டப்பட்ட குவாரிகளும் தப்பவில்லை. குவாரிகளில் கற்கள் வெட்டி எடுக்கப்பட்டதில் விதிகளை மீறிப் பல லட்சம் கன மீட்டர் அளவுக்குக் கற்கள் வெட்டப்பட்டது எல்லாம் வெளிச்சத்துக்கு வந்தது. கல்குவாரியில் மத்திய பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆய்வு நடத்திய போது பல ஆயிரம் கோடி ரூபாய் இழப்பை ஏற்படுத்தும் விதத்தில், அனுமதிக்கப்பட்டதைவிட நான்கு மடங்கு கற்களை வெட்டி எடுத்த விஷயத்தை வருமானவரித் துறை கண்டுபிடித்தது. கல்குவாரியில் மட்டுமே விதிகளை மீறி 500 கோடி ரூபாய்க்கு மேல் பணத்தைக் குவித்ததாகப் புகார் எழுந்தது. சட்டத்துக்குப் புறம்பாக மணலை அள்ளி வழுதப்பட்டி ஆற்றையே கபளீகரம் செய்துவிட்டதாக குற்றச்சாட்டு படிக்கப்பட்டது. ஆனால், அந்த விஜயபாஸ்கர் மீது இந்த 6 ஆண்டுக் காலத்தில் சட்டவிரோத பணப் பரிமாற்றத்திற்காக அமலாக்கத் துறை சிறு துரும்பைக்கூடக் கிள்ளிப் போடவில்லை.

2017ல் நடந்த ரெய்டுக்குப் பிறகு விஜயபாஸ்கரின் நிலங்களையும் வங்கிக் கணக்குகளையும் வருமானவரித்துறை முடக்கியது. அதனை எதிர்த்து விஜயபாஸ்கர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். 2022 டிசம்பரில் இந்த வழக்கு நீதிபதி அனிதா சுமந்த் முன்பு விசாரணைக்கு வந்த போது, **“விஜயபாஸ்கருக்குச் சொந்தமான குவாரிகளில் அளவுக்கு அதிகமான கற்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், குறைவாகவே கணக்குக் காட்டி வரி ஏய்ப்பு நடத்தியிருக்கிறார். குட்கா, குவாரி நிறு வனங்களிடமிருந்து மொத்தம் ரூ.87.90 கோடி லஞ்சமாகப் பெற்றிருக்கிறார். அதற்கான எல்லா ஆதாரங்களும் விஜயபாஸ்கர் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டன. அதனால்தான் சொத்துகள் முடக்கப்பட்டன”** என வருமானவரித் துறை சொன்னது. குட்கா, குவாரி நிறுவனங்களிடம் இருந்து லஞ்சம் வாங்கியதாக வருமானவரித் துறையே ஒப்புக் கொண்ட பிறகும் விஜயபாஸ்கர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அப்படியே தான் கிடக்கிறது வழக்கு.

**குட்கா வழக்கில் சி.பி.ஐ. வழக்கு நடத்துவதற்கும் மற்ற ஊழல் வழக்குகளில் லஞ்ச ஒழிப்புத் துறை விசாரணை நடத்துவதற்கும் அனுமதி தராமல் ‘சனாதனி’ ஆளுநர் ரவி என்ன இழுப்பு இழுத்தார் என்பதும் அனைவருக்கும் தெரியும். இத்தகையவர்கள்தான் ரூ.4 ஆயிரத்து 730 கோடி என்று மணல் வீடு கட்டுகிறார்கள்.**

## கிண்டி காந்திமண்டப வளாகத்தில் – திராவிடப் பேரொளி

# அயோத்திதாசப் பண்டிதர் திருவுருவச் சிலை - மணிமண்டபம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

சென்னை, டிச. 1-

தமிழ்நாடு அரசின் சார்பில், திராவிடப் பேரொளி அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் 175வது ஆண்டு விழாவின் நினைவாக 2 கோடியே 49 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் திருவுருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபத்தை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (1.12.2023) காலை 10.30 மணியளவில் திறந்து வைத்து சிறப்பிக்கவுள்ளார்.

திராவிடப் பேரொளி அயோத்திதாசர் 1845 ஆம் ஆண்டு மே 20 ஆம் நாள் அன்றைய மெட்ராஸ் மாகாணத்தில் உள்ள தேனாம்பேட்டை ஆயிரம் விளக்கு பகுதியில் பிறந்தார்.

தமிழ், ஆங்கிலம், பாலி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றறிந்தார். சித்த மருத்துவம் பயின்று, சிறந்த சித்த மருத்துவராக விளங்கினார். தனக்கு தமிழ் கற்றுக் கொடுத்த ஆசிரியர் வல்லக்காலத்தி அயோத்திதாசர் எனும் தனது ஆசிரியர் பெயரையே தன் பெயராகவே மாற்றிக் கொண்டார். இவர் சிறந்த எழுத்தாளர், ஆய்வாளர், வரலாற்று ஆசிரியர், பதிப்பாளர், மருத்துவர், பேச்சாளர், மொழியியல் வல்லுநர், பன்மொழிப் புலவர் என்ற பன்முக ஆற்றலைக் பெற்றிருந்தார்.

அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள் ஏற்றத்தாழ்வு மிக்க சமூகங்களை கண்டு வெகுண்டெழுந்து சமூக சீர்திருத்த பாதையில் தனது பயணத்தை தொடங்கி சாதி ஒழிப்பையும், சமூக விடுதலையையும் தனது லட்சியமாக கொண்டிருந்தார். தந்தை பெரியார் அவர்கள், அயோத்திதாசப் பண்டிதரை பற்றி குறிப்பிடும்போது, “என் பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்கும், சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடி” என்று கூறினார்.

### தென்னிந்திய சமூக சீர்திருத்தங்கள்!

அயோத்திதாசர் சாதி, மத வேறுபாடுகளை நீக்கி தமிழன் என்ற உணர்வு அனைவரிடத்திலும் இருக்க வேண்டுமென்றார். ஒரு பைசா தமிழன், திராவிடப் பாண்டியன் போன்ற இதழ்களை நடத்தி வந்தார். தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு போராட்டங்கள் நடைபெற்ற சமயங்களில் சமூகம், சாதியால் பிளவுற்று இருந்த போது இந்தியாவின் விடுதலை முதலில் ஏற்றத்தாழ்விலிருந்து கிடைக்க வேண்டுமென்று கூறினார்.

சாதியால், மதத்தால், இனத்தால், நிறத்தால் உலகம் மாறுபட்டு தள்ளப்பட்ட போது உரிமைக் குரல் கொடுத்த நல்லோர் கள் வரிசையில் அயோத்திதாசப் பண்டிதரை மக்கள் அனைவரும் தென்னிந்திய சமூக சீர்த்திருத்தத்தின் தந்தை என போற்றி புகழ்ந்தனர்.

### மக்கள் உரிமைக்கு பாடுபட்டவர்!

1892 ஆம் ஆண்டு சென்னை மாகாண சங்கம் சார்பில் அரசுக்கு இரண்டு கோரிக்கை வைத்தார். அதில் ஒன்று கல்வி உரிமை, மற்றொன்று நில ஒதுக்கீடு ஆகும். அயோத்திதாசர் தாமே முன்னின்று தாழ்த்தப்பட்ட மக்கள் உரிமைக்கு அரும்பாடு பட்டார். தாழ்த்தப்பட்டவருக்கு கல்வி வசதியோடு உதவித் தொகை மற்றும் அரசு வேலையும், உள்ளாட்சி அமைப்புகளில் வாய்ப்பும் வழங்கிட வேண்டும் என்று வலியுறுத்தி வெற்றி கண்டார்.

திராவிடப் பேரொளி அயோத்திதாசப் பண்டிதரின் எண்ணப்படி, எல்லாரும் எல்லாம் பெற வேண்டும் என்ற நல்ல சிந்தனையோடு செயல்பட்ட அன்னாரின் புகழுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள அன்னாரது திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபத்தை திறந்து வைக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றார்கள்.

## நாகையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு!

# 90 நிறுவனங்கள் ரூ.339.69 கோடியில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில் கையெழுத்து!

*நாகை, டிச. 1-*

*நாகை மாவட்டம் நாகையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024ஐ முன்னிட்டு மாவட்ட அளவிலான பெருந்திரள் மாநாட்டு கூட்டம் நடைபெற்றது. நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் முன்னிலை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் பேபி வரவேற்றார்.*

*கூட்டத்தில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை தாங்கி நாகை மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024ஐ முன்னிட்டு 90 தொழில் நிறுவனங்களுக்கு 339 கோடியே 69 லட்சம் முதலீடு செய்ய புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து அவற்றை தொழில் முதலீட்டாளர்களிடம் வழங்கி பேசினார். நிகழ்ச்சியில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர்கள் நாகை மாலி, முகமதுஷநவாஸ் மற்றும் தி.மு.க. மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசுதுறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேசுகையில், தமிழ்நாடு அரசு வரும் 7.1.2023 மற்றும் 8.1.2024 நாட்களில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024ஐ சென்னையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. பன்னாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களை தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஊக்குவிக்கும் நிகழ்வாக உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்படுகிறது. 2030ஆம் ஆண்டுக்குள் 1 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பு கொண்ட பொருளாதாரத்தை எட்டுவது என்பது தமிழ்நாடு முதலமைச்சரின் இலட்சியமாகும். இந்த இலட்சியத்தை நோக்கிய தமிழ்நாடு அரசின் பயணத்தில் முக்கிய படிநிலை இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 ஆகும்.*


*இந்த மாநாட்டினையொட்டி நமது நாகை மாவட்டத்திற்கு குறைந்தது 329 கோடி ரூபாய்க்கான தொழில் முதலீடுகளை ஈர்க்க வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டமாக இருந்தாலும் இந்த இரண்டரை ஆண்டுகால ஆட்சியில் இந்த அரசு செய்துள்ள உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள், தொழில்முனைவோருக்கு தருகின்ற ஆதரவு, சலுகைகள், மானியங்கள் இவற்றை எல்லாம் பார்த்து 328 கோடி இலக்கை எல்லாம் தாண்டி 90 தொழில் நிறுவனங்கள் நாகை மாவட்டத்தில் ரூ.339 கோடியே 69 இலட்சம் முதலீடு செய்ய முன் வந்து தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். வேளாண்மை மற்றும் கடல் சார் வளங்களை மையமாகக் கொண்ட இந்த நாகை மாவட்டம் தொழில் துறையிலும் தற்போது வளரத் தொடங்கியுள்ளது. இந்த மாவட்டம் தொழில் துறையில் வளர வேண்டும் என்பதே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய குறிக்கோளாக உள்ளது. இதை நிறைவேற்றுவதில் முக்கிய பொறுப்பு வங்கியாளர்களுக்கு உண்டு. தொழில் நிறுவனங்களை புதிதாகத் தொடங்க ஆர்வம் கொண்டு அரசின் சுய வேலைவாய்ப்புத் திட்டங்களின் கீழ் மானிய கடனுதவி கேட்பவர்கள் நடத்தும் தொழிலை விரிவாக்கம் செய்யும் புத்தாக்கம் செய்யவும் உள்ளது. தொழில் தொடங்க, அதனைத் தொய்வின்றி வெற்றிகரமாக நடத்த உங்களுக்கான அனைத்து ஆதரவுகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்க உங்களோடு துணை நிற்க தமிழ்நாடு அரசும், மாவட்ட நிர்வாகமும் ஆயத்தமாக உள்ளது. வளர்ச்சி மிகுந்த தமிழ்நாட்டில் வளரத் துடிக்கும் நாகை மாவட்டத்தில் முதலீடு செய்ய வாருங்கள், உள்ளளோடு உங்கள் தொழில் நிறுவனத்தோடு இந்த மாவட்டமும் வளரட்டும்.*

*இவ்வாறு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேசினார்.*



கலைஞர் 100 1924 - 2023





திராவிடப் பேரொளி
அயோத்திதாச பண்டிதர்
அவர்களின்
திருவுருவச் சிலையுடன் கூடிய
மணிமண்டபம்
திறப்பு விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

திராவிடப் பேரொளி அயோத்திதாச பண்டிதர் அவர்களின் 175ஆவது ஆண்டு விழாவின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபத்தினைத் திறந்து வைப்பார்கள்.

நாள்: 1.12.2023, வெள்ளிக்கிழமை, காலை 10.30 மணி
இடம்: காந்தி மண்டப வளாகம், கிண்டி, சென்னை

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் பங்கேற்றுச் சிறப்பிப்பார்கள்.


175ஆவது ஆண்டு விழா
(1845 – 1914)

அனைவரும் வருக!

“அயோத்திதாசர் தமிழன், திராவிடன் ஆகிய இரண்டு சொற்களையும் அறிவாயுதமாக ஏந்தினார்.”
- மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

மரு.இரா.செல்வராஜ், இ.ஆ.ப.,
அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

செ.ம.தொ.இ./1369/வரைகலை/2023

## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (9)

# வெள்ளை இருட்டை விலக்க வந்த கருப்பு நிலா!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

க்யூனு எனப்படும் மண்டேலா பிறந்த ஊரில், ஓய்வு நேரங்களில் பெரியோர்கள் கூறும் தமது இனத்தவர் பற்றிய பழைய கதைகளையும், வெள்ளையர்களால் தம்மின வரலாறுகள் மறைக்கப்பட்டதையும், வெள்ளையர் நுழைவுக்கு முன்பு அங்கிருந்த கலை, கலாச்சாரம், வாழ்க்கை முறைகளையும் பெரியோர்கள் கூறிடக் கேட்டு புத்துணர்ச்சி பெறும் மண்டேலா, படிப்பையும் விடவில்லை! ஆடு மாடு மேய்க்கும் வேலையையும் தொடர்ந்தார்.

அதே சமயம் தமது இனத்தாரின் துயர் துடைத்து, உரிமைகள் நிலை நாட்டப்பட வேண்டுமென்று அந்த இளம் வயதிலேயே அழுத்தமான உறுதி பூண்டார் மண்டேலா.

1938ஆம் ஆண்டு அவரது உறவினர் ஜோன்கின்டாபா முயற்சியினால், மண்டேலா, முதலில் “கெல்ட் டவுன்” கல்லூரியிலும் - பிறகு “போர்ட்ஹேர்” கல்லூரியிலும் சேர்க்கப்பட்டார்.

அப்போதுதான் அவரது முதல் போராட்டத்துக்கான துளிர் விடத் தொடங்கியது. அங்கே வெளிப்பட்ட இன வேற்றுமைக் கொடுமையை எதிர்த்து, இளைஞர் மண்டேலா தலைமையில் வேலை நிறுத்தம் அறிவிக்கப்படவே, கல்லூரி நிர்வாகம் மண்டேலாவை வெளியேற்றியது. ஆம் - மண்டேலாவுக்கு அவர் நடத்திய உரிமைப் போரில் கிடைத்த முதல் தண்டனை அது!

மன்னிப்பு கேட்டுக் கொண்டால் மீண்டும் கல்லூரியில் சேரலாம் என்று கூறப்பட்டது. அதை மானப் பிரச்சினை என்று கூறி மறுத்து விட்டார் மண்டேலா.

பின்னர் தனது மாமன் மகன் ஜஸ்டிஸ் என்பவருடன் சேர்ந்து ஜோகன்ஸ்பெர்க் நகருக்குச் சென்று தங்கச் சுரங்கத்தில் வேலை பார்த்தார். அங்கிருந்தும் அவரது உறவினர் தூண்டுதலால் வெளியேற்றப்பட்டதால், மண்டேலா, சட்டம் படித்திட முனைந்தார். ‘லாசா சிடிங்ஸ்கி’ என்ற வெள்ளைக்கார வழக்கறிஞரிடம் சட்டக் கல்வியில் பயிற்சி பெற்று திறமையாளரானார்.

மண்டேலா வாழ்க்கை, கட்டுப்பாடு மிக்கது என்றும், அதிகாலையில் எழும் வழக்கமுடையவர் என்றும் - நாளும் தவறாமல் நடைப் பயிற்சி மேற் கொண்டவர் என்றும் - எளிமையான உணவே அருந்தி, எப்போதும் சுறுசுறுப்புடன் பணியாற்றுபவர் என்றும் - பெண்களுக்குத் துணையாக அடுக்களை வேலைகளில் கூட ஈடுபடுவார் என்றும் - அவரது சரித்திரக் குறிப்புகள் கூறுகின்றன.

கறுப்பர் இன மக்களுக்கும், வெள்ளையருக்குமிடையே கடுமையான புகைச்சலும் - மோதுதல்களும் இருந்த போதிலும், மண்டேலா, இரு தரப்பு மாணவர்களிடமும் பரந்த மனத்துடனும், பண்பாட்டுடனும் நேசமாகப் பழகி, அமைதியாக காந்திய வழியிலே அறப்போர் நடத்தி, இன வேற்றுமைக் கொடுமையை அகற்ற நினைத்தார்!

1948ஆம் ஆண்டு, மண்டேலா, இளைஞர் அணியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கால கட்டத்தில், கறுப்பின மக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் அவர் கண்களை உறுத்தின. “காஃபிர்” என்ற இழிந்த வார்த்தையினால் கறுப்பின மக்கள் அழைக்கப்பட்டதையும் - தெருக்களில் நடமாட முடியாமல் தடுக்கப்பட்டதையும் - மண்டேலாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதுமட்டுமா? கறுப்பின மக்களின் நிலங்களை வெள்ளையர் பறித்துக் கொண்டனர் - வெள்ளையர் கறுப்பரிடையே காதல் மற்றும் கலப்பு மணங்கள் - சட்ட விரோதமாயின - இனப்பகை, பெரும் பகை - கறுப்பினத்தாருக்கு வேலைகள் மறுக்கப்பட்டன - கேளிக்கை இடங்களில் அவர்களுக்கு அனுமதியில்லை - மீறினால் கடும் தண்டனை.

இந்தக் கொடுமைகளை எதிர்த்து, 1948இல் இளைஞர் அணியின் செயலாளரான மண்டேலா, 1949இல் கூட்டிய மாநில மாநாடு ஒன்றில் வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தை நடத்த தீர்மானம் நிறைவேற்றினார்.

அதைத் தொடர்ந்து, அவர், 1951இல் இளைஞர் அணியின் தலைவராகவே தேர்வு செய்யப்பட்டார். அப்போது அவருக்கு வயது முப்பத்தி மூன்று தான்! ஆம், வெள்ளை இருட்டை விலக்க கறுப்பு நிலாவின் பிறையாக அந்த இளைஞர் அணி தோன்றியது!

வெள்ளையர் வெறித்தனத்தை எதிர்த்து அமைதியாக அரும்பிய மண்டேலாவின் அறப்போர், புரட்சி மலராகவும் பூத்திடத் தவறவில்லை.

கறுப்பு இன மக்களின் மாணவர் போராட்டமும் தொடங்கியது.

புரட்சிகள் - கிளர்ச்சிகளின் விளைவாக - சிறைப்பட்ட மண்டேலாவை, நாட்டை விட்டு வெளியேறுவதாக இருந்தால், விடுதலை செய்வதாக தென்னாப்பிரிக்க வெள்ளையர் அரசு கூறியது.

அதற்கு மண்டேலா மறுப்புரைத்து, “எங்களுக்கு சுதந்திர உரிமை இல்லையென்றால், நான் அடைபட்டுள்ள சிறைச் சாலையே திருப்தி அளிக்கக் கூடியது” என்று கூறிவிட்டார். அவர் நடத்திய போராட்டங்களின் தொடர்ச்சியாக, நீண்ட கால சிறை வாழ்க்கையைத்தான் அவர் ஏற்றுக் கொள்ள நேர்ந்தது. சிறையில் ஆரம்ப நிலையில் கேவலமான உணவு, அதுவும் பசியை அடக்கக் கூடியதல்ல - கல் தரையின் மீது உறங்குவதற்கு ஒரு பாய் - நாளேடுகள் வைத்திருந்தால் சிறை சட்டப்படி தண்டனை - நாள் முழுவதும் வேலை - ஒவ்வொரு நாளும் வேலை முடிந்ததும் உடைகள் அவிழ்க்கப்பட்டு சோதனை - இவ்வளவு கொடுமைகளையும் அனுபவித்த மண்டேலா, இளமை முதல் அவர் கொண்ட வைராக்கியத்தின் எதிரொலியாக சிறைக் கொடுமைகளைப் பற்றி அவர் சொன்ன வாசகம் பின் வருமாறு:-

**“சிறைக் கொடுமை என்னை இன்னலுக்கு ஆளாக்கவில்லை.**

**சிறைக்கு வெளியே என் மக்கள்**

**அனுபவிக்கும் துன்ப துயரங்களை எண்ணித்தான்**

**நான் வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறேன்”**

என்பதாகும்.

மண்டேலாவின் இந்தத் தியாக வாழ்க்கை தென்னாப்பிரிக்க நாட்டு இளைஞர்களுக்கு மட்டுமல்ல, இந்தப் பூமிப் பந்தில் வாழ்ந்து கொண்டு புத்துலகம் காணத் துடிக்கின்ற ஏறுநடை இளைஞர்களுக்கெல்லாம் இதய கீதமாகும்.

1959ஆம் ஆண்டு அக்டோபர் 11ஆம் தேதி, மண்டேலா உள்ளிட்ட விடுதலை இயக்க வீரர்களின் வழக்கில் இவர்களுக்கு எதிராக வாதாடிய அரசு வழக்கறிஞர் பிரோ என்பவர், நோயால் சிக்குண்டு மறைந்து விட்டார் என்ற செய்தி வானொலியின் மூலம் அறிவிக்கப்பட்டது. அந்தச் செய்தியினை அறிந்த போராட்ட வீரர்கள் மன மகிழ்ச்சி அடையவில்லை. மாறாக, அவர் அரசு வழக்கறிஞராக தனக்கு அளிக்கப்பட்ட பணியினை சிறப்பாகச் செய்தார் என்ற வகையிலும், இன்னும் சொல்ல வேண்டுமேயானால், மனிதநேய மிக்க மனிதராகத்தான் அவர் செயல்பட்டார் என்ற வகையிலும், மறைந்த அந்த வழக்கறிஞருக்கு அஞ்சலி செலுத்த வேண்டியது தங்கள் கடமை என்பதைக் காட்டிக் கொண்டார்கள்.

தேச விடுதலைப் போராட்ட வீரர்கள் கைது செய்யப்பட்டு சுமார் 27 மாதங்களுக்குப் பிறகுதான் அவர்கள் மீதான வழக்கு விசாரணைக்காகவே எடுத்துக் கொள்ளப்பட்டது. குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்ட விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவரும், தாங்கள் எந்தவித மான குற்றமும் செய்யவில்லை என்று மறுப்பு தெரிவித்தனர். அவர்களுக்குத் தரப்பட்ட குற்றப் பத்திரிகை மட்டும் 2000 பக்கங்கள் கொண்டதாக இருந்தது. 210 சாட்சிகள் விசாரிக்கப்பட வேண்டுமென்று கோரப்பட்டதில், 200 பேர் காவல் துறையைச் சார்ந்தவர்கள்.

வழக்கு விசாரணை, தொடர்ந்து திருச்சபை அமைந்துள்ள பழைய காலக் கட்டிடம் ஒன்றிலே நடைபெற்றது. அந்தத் திருச்சபையின் பாதிரியாருடைய அறைதான் உணவருந்தும் இடமாகப் பயன்படுத்தப்பட்டது. அந்த நேரத்தில் திருமதி தையநாயகி பிள்ளை என்ற ஒரு அம்மையார்தான் தொண்டர் அணியினருடன் இணைந்து இந்திய முறைப்படி உணவுப் பொருட்களைத் தயாரித்து, விசாரணைக் கைதிகளுக்கு அளித்து வந்திருக்கிறார். முற்பகலில் வடையும், தேநீரும் என்றும், பிற்பகலில் அதுபோலவே ஏதாவது சிற்றுண்டியும், தேநீரும் என்றும், மதியம் இந்திய முறைப்படியான உணவு என்றும் அந்த அம்மையார் பரிமாறியிருக்கிறார். இவ்வாறு தென்னாப்பிரிக்கப் போராட்டத்தில் ஈடுபட்ட போராட்ட வீரர்களுக்கு வழக்கு நடைபெற்ற நாட்களில் எல்லாம் உணவளித்து உபசரித்த அந்த திருமதி தையநாயகி பிள்ளை என்பவர் யார் தெரியுமா? அவர் தமிழ்நாட்டில் பிறந்த ஒருவரின் வழி வந்தவர் என்பதை, நெல்சன் மண்டேலா பற்றிய வாழ்க்கை வரலாற்றுப் பக்கங்களில் காணும்போது, நம்மையும் அறியாமல் ஒரு மகிழ்ச்சி நம் உள்ளத்தில் ஏற்படத்தான் செய்யும்.

இளம் வயதிலேயே புரட்சிக்காரராக மாறி, தென்னாப்பிரிக்காவின் விடுதலைக்காகப் பாடுபட்ட நெல்சன் மண்டேலாவைப் பற்றி நமது இளைஞர்களுக்கு நினைவூட்டுகின்ற இந்த நேரத்தில், அவர் கூறிய சில வரிகளோடு இன்றைய கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

“The Indian campaign became a model for the type of protest that we in the youth league were calling for”

(இளைஞர் இயக்கத்தின் சார்பில் நாங்கள் நடத்தி வரும் எதிர்ப்புப் போராட்டத்திற்கு, இந்தியர்கள் நடத்திய இயக்கமே முன் மாதிரியாக இருந்தது.)

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 16.11.2007)

## கன மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில்

# அமைச்சர்கள் உள்ளிட்டோர் நிவாரணப் பணிகளை மேற்கொள்வீர்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

**சென்னை, டிச.1–**

**‘‘கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைச்சர்கள் உள்ளிட்டோர் நிவாரணப் பணிகளை மேற்கொள்வீர்’’ என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.**

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், சென்னை உள்பட மாநிலம் முழுவதும் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. தொடர்ந்து, அடுத்த 2 நாள்களுக்கு கன மழை எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுஉள்ளது.

இதனிடையே தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் நேற்று முன்தினம் கனமழை கொட்டித் தீர்த்தது. ஒரு மணி நேரத்தில் 8 செ.மீ வரை மழை பெய்தது.



**பள்ளிகளுக்கு விடுமுறை!**

கனமழை காரணமாக சென்னை உள்பட 4 மாவட்டங்களுக்கு பள்ளிகளுக்கு மட்டும் நேற்று (நவ.30) விடுமுறை அறிவிக்கப்பட்டது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் தொடர்ந்து மிக கனமழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்தது.

இந்த நிலையில் தொடர் கன மழை காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்ட பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், வடகிழக்குப் பருவமழையை தொடர்ந்து பேருந்துகளில் பராமரிப்பு அவசியம் என போக்குவரத்துக் கழகங்களுக்கு தமிழ்நாடு அரசு அறிவுறுத்தி உள்ளது. அதன்படி, அரசு பேருந்துகளில் உரிய பராமரிப்பை உறுதி செய்ய வேண்டும். பேருந்தின் உட்பகுதிகளில் மழைநீர் புகுவதை தடுக்க பணிமனைகளில் முறையான பராமரிப்பு அவசியம். மேற்கூரை, படிக்கட்டுகளை தொடர்ந்து கண்காணித்து பாதுகாப்பான பயணத்தை உறுதிப்படுத்த வேண்டும் என போக்குவரத்துக் கழகங்களுக்கு தமிழ்நாடு அரசு அறிவுறுத்தி உள்ளது.

சென்னையில் பலத்த மழை பெய்து வருவதால் மக்கள் தேவையின்றி வெளியே வர வேண்டாம் என்று மாநகராட்சி அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இந்த நிலையில் மழை பாதித்த இடங்களில் தேவையான உதவிகளைச் செய்ய அமைச்சர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

**மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.**

# கனமழையையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்...

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!... முதல் பக்கத் தொடர்ச்சி

மின்தடை ஏற்படக்கூடிய இடங்களில் உடனடியாக மக்களுக்கு எந்தவித இடையூறுமின்றி மின்விநியோகம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளவும், அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், தற்போது பெய்துவரும் கனமழையால் சாலைகளில் தேங்கியுள்ள மழைநீரை துரிதமாக அகற்றிவுடம், புதிதாக புயல் உருவாகவுள்ளதையொட்டி அதன்பொருட்டு பெய்யும் கனமழையால் அடுத்து வரும் சில நாட்களில் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம், சாலைகள், சுரங்கப் பாதைகள் இவற்றில் மழைநீர் தேங்காமல் உடனுக்குடன் அகற்றிட தேவையான மின் மோட்டார்கள் அமைத்திடவும், மழைநீர் கால்வாய்களில் ஏற்படும் அடைப்புகளை நீக்கிடவும், அப்பகுதியின் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

மேலும், கடந்த இரு தினங்களில் மழைநீர் தேங்கிய இடங்களை குறிப்பாக கண்காணித்து, அங்குள்ள நீரை அகற்றிடவும், மீண்டும் அப்பகுதியில் மழைநீர் தேங்கா வண்ணம் உயர்சக்தி மின் மோட்டார்களை வைத்து நீரினை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளவும், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் குடியிருப்பு பகுதி மக்களிடம் தொடர்பில் இருக்கவும் அறிவுறுத்தினார். அவர்களுக்கு தேவையான உணவு, பால், மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை இருப்பு வைத்திடவும் அறிவுறுத்தினார்.

**கனமழை பெய்யவுள்ள மாவட்டங்கள்**

27.11.2023 அன்று உருவான காற்றமுத்த தாழ்வு மண்டலம் தற்போது தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நிலவுகிறது. இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் அடுத்த 24 மணி நேரத்திற்குள் குறைந்த காற்றமுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைய வாய்ப்புள்ளது. பின்னர், இது வடமேற்கு திசையில் நகர்ந்து, அடுத்த 48 மணிநேரத்திற்குள் மேலும் வலுவடைந்து தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டியுள்ள தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் 2.12.2023 அன்ற புயல் சின்னமாக மாறக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

30.11.2023 கனமழை – செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள். (10 மாவட்டங்கள்), 01.12. 2023 கனமழை-கடலூர், நாகப்பட்டினம், மயிலாடு துறை, திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை (6 மாவட்டங்கள்), 02.12.2023 மிக கனமழை சென்னை, திருவள்ளூர், காஞ்சி புரம், செங்கல்பட்டு மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள். (5 மாவட்டங்கள்)

கனமழை இராணிப்பேட்டை, கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள். (8 மாவட்டங்கள்), 03.12.2023 மிக கனமழை திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை, செங்கல்பட்டு மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள். (5 மாவட்டங்கள்),கனமழை இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள். (8 மாவட்டங்கள்)

04.12.2023 கனமழை சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், இராணிப்பேட்டை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள். (5 மாவட்டங்கள்),

**தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின் பேரில் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

● பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் கடலோர மாவட்ட ஆட்சியர்களுக்கு 29.11.2023 அன்று, நீர்த்தேக்கங்களில் நீர் மேலாண்மை செய்வது, 437 முன்னெச்சரிக்கை அமைப்புகள் மூலம் மீனவர் களுக்கும், பொது மக்களுக்கும் எச்சரிக்கை தகவல்கள் வழங்குவது, பாதிப்பிற்குள்ளாகக் கூடிய பகுதிகளில் இருந்து பொது மக்களை முன் கூட்டியே பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பது, 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் மற்றும் இதர நிவாரண மையங்களை அனைத்து அடிப்படை வசதிகளுடன் தயார் நிலையில் வைத்திருப்பது ஆகிய அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்றுள்ள, மீன் பிடிப்படகுகள் 29.11.2023க்குள் கரைக்குத் திரும்புமாறு மீனவர்களுக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கிழக்கு கரையில் இருந்த அனைத்து படகுகளும் பாதுகாப்பாக கரைக்கு திரும்பியுள்ளன.

இதுமட்டுமின்றி, மேற்குக் கரை யில், 477 படகுகள் பாதுகாப்பாக உள்ளன. மேலும், கரையில் உள்ள மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடலில் உள்ள மீனவர்கள் கரைக்கும் திரும்புமாறும், கடலுக்குள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மீனவர்களுக்கு எச்சரிக்கையும், பொது மக்களுக்கு புயல் குறித்த எச்சரிக்கையும் கடலோரப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 437 முன்னெச்சரிக்கை அமைப்பு கள் மூலம் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது.

**மீட்பு நடவடிக்கைகளுக்கு முப்படையைச் சேர்ந்த அலுவலர்கள்!**

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு முப்படையினை தயார் நிலையில் வைத்திட முப்படையினைச் சார்ந்த அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கண்காணிப்பு பணிகளுக்கென மாவட்டங்களுக்கு நியமிக்கப் பட்டுள்ள இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் தொடர்புடைய மாவட்டங்களுக்கு விரைந்து சென்று மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைளை மேற்பார்வையிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையின் 200 வீரர்கள் கொண்ட 8 குழுக்கள் மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையின் 225 வீரர்கள் கொண்ட 9 குழுக்கள் மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் சென்னை மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள விரைந்துள்ளனர்.

> **த**ற்போது பெய்துவரும் கனமழையால் சாலைகளில் தேங்கியுள்ள மழை நீரை துரிதமாக அகற்றிவுடம், புதிதாக புயல் உருவாகவுள்ளதையொட்டி அதன்பொருட்டு பெய்யும் கனமழையால் அடுத்து வரும் சில நாட்களில் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம், சாலைகள், சுரங்கப் பாதைகள் இவற்றில் மழைநீர் தேங்காமல் உடனுக்குடன் அகற்றிட தேவையான மின் மோட்டார்கள் அமைத்திடவும், மழைநீர் கால்வாய்களில் ஏற்படும் அடைப்புகளை நீக்கிடவும், அப்பகுதியின் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்களும், 4,967 நிவாரண முகாம்களும் அனைத்து மாவட்டங்களிலும் தயார் நிலையில் உள்ளன.மாநில அவசரகால செயல்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அளவிலான அவசரகால செயல்பாட்டு மையங்கள் 24 மணி நேரமும் கூடுதலான அலுவலர்களுடன் இயங்குகின்றன.

புயல், கனமழை தொடர்பான முன்னெச்சரிக்கை தகவல்கள் TNSMART செயலி மூலமாகவும், Twitter, Facebook உள்ளிட்ட சமூக ஊடகங்கள் மூலமாகவும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (29.11.2023) முதல் செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கத்திலிருந்து 1500 கன அடி உபரி நீர் வெளியேற்றப்படுவதால், பொதுவான முன்னெச்சரிக்கை நடைமுறை மூலம் 5.23 இலட்சம் நபர்களுக்கு எச்சரிக்கை குறுஞ்செய்திகள் வழங்கப்பட்டுள்ளன.

நேற்று (30.11.2023) காலை 8.00 மணி முதல் புழல் நீர்த்தேக்கத்திலிருந்து 2000 கன அடி உபரி நீர் வெளியேற்றப்படுவதால், பொதுவான முன்னெச்சரிக்கை நடைமுறை மூலம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை குறுஞ் செய்திகள் அனுப்பப்பட்டு வருகிறது.

**கண்காணிப்பு அலுவலர்கள் முகாமிட்டு நிவாரணப் பணிகள்!**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதி மற்றும் மாவட்டங்களுக்கென நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் தொடர்புடைய பகுதிகளில் முகாமிட்டு முன்னெச்சரிக்கை, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில், தமிழ்நாடு கமாண்டோ படையினைச் சார்ந்த 50 வீரர்கள் கொண்ட 2 குழுக்களும், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினைச் சார்ந்த 25 வீரர்கள் கொண்ட ஒரு குழுவும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

சென்னையில் 162 நிவாரண மையங்கள் தயாராக வைக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தாழ்வான பகுதிகளில் மழை நீரை வெளியேற்ற 296 நீர் இறைப்பான்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆய்வின் போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, துணை மேயர் மு. மகேஷ் குமார், வருவாய் நிருவாக ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்/கூடுதல் தலைமைச்செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் எஸ்.ஏ. ராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

கழக இளைஞர் அணி செயலாளர், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்

# உதயநிதி ஸ்டாலின் நீலகிரி மாவட்டத்திற்கு வருகை!

## மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் அறிக்கை!

*உதகை, டிச. 1 -* நீலகிரி மாவட்ட திமுக இளைஞர் அணியின் செயல்வீரர்கள் கூட்டம் உதகை NCMS வளாகத்தில் நாளை (02.12.2023 - சனிக்கிழமை) காலை 10.30 மணியளவில் நடைபெற உள்ளது.

இதில் கலந்து சிறப்புரையாற்றிட திராவிட முன்னேற்ற கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் - விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (01.12.2023 ) மாலை நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் தொடராக திகழ்ந்து கழகத்தையும், தமிழ்நாட்டையும் சிறப்புடன் வழிநடத்திவரும் கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் இளைஞர் அணி செயலாளராக இருந்து செயல்பட்டார்களோ, அதேபோல் திராவிட நாயகன் தமிழக முதல்வர் அவர்களுக்கு இளைஞர் அணி செயலாளர் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்று முதன் முதலாக நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளார் என்பது நம் அனைவருக்கும் மிகழ்ச்சி யான செய்தியாக அமைந்துள்ளது.

அமைச்சராக பொறுப்பேற்றது முதல் அனைத்து தரப்பு மக்களும் பாராட்டி அளவிற்கு தனது துறைச் சார்ந்த பணிகளை சிறப்புடன் செய்து வருவதோடு, நாட்டிலுள்ள இளைஞர்களுக்கு ஓர் வழிகாட்டியாக திகழ்ந்து வருகிறார்கள். தற்போதைய அரசியல் சூழலில் நாடே எதிர்நோக்கும் இளந்தலைவராக இவரது செயல்பாடுகள் அமைந்துள்ளது நம் அனைவருக்கும் பெருமைக்குரியதாகும்.

நீலகிரி மாவட்டத்திற்கு இன்று (01.12.2023 - வெள்ளிக்கிழமை) வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டா லின் அவர்களை வரவேற்க அனைவரும் தயாராவீர் என அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பா.முபாரக் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!


வேலூர் மாவட்டம், குடியாத்தம் ஒன்றியம், இராஜகுப்பம் கிராமத்தைச் சேர்ந்த ஜி.முருகானந்தம், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்: 30.11.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன், கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை, சிறப்புத்திட்ட அமலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நீலகிரி மாவட்டம் உதகை இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்திற்கு வருகை தருவதையொட்டி உதகை என்.சி.எம்.எஸ். மைதானத்தில் அமையவிருக்கும் திடலை ஆய்வு மேற்கொண்டார். உடன் நீலகிரி மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் சுந்தரவடிவேல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



## நாம் ஒன்றிணைந்து - மொழி வளர, பண்பாடு பெருக புதிய சகாப்தத்தை எழுதுவோம்!

# இது இலக்கிய விழா மட்டுமல்ல; மாநில உரிமைகளைக் காக்கும் விழா!

## கேரள மாநிலம் - கண்ணூர் பல்கலைக் கழக இலக்கிய விழாவில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழுரை !

**திருவனந்தபுரம், டிச. 1 -**

**கேரள மாநிலம், கண்ணூர் பல்கலைக் கழக இலக்கியத் திருவிழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்றுச் சிறப்புரையாற்றுகையில், “நாம் அனைவரும் ஒன்றிணைந்து மொழி வளர, பண்பாடு பெருக, ஒவ்வொரு தனி நபரும் தன்னுடைய பாரம்பரியத்தில் பெருமை கொள்ளவும் ஒரு புதிய சகாப்தத்தை நாம் எழுதுவோம்” எனவும், “இந்த விழா இலக்கிய விழா மட்டுமல்ல; மாநில உரிமைகளைக் காக்கும் விழா” எனவும் குறிப்பிட்டார்.**

கண்ணூர் பல்கலைக்கழக இலக்கியத் திருவிழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும், கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம் வருமாறு:

கேரளத்தின் பிரபலமான கண்ணூர் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் இந்த இலக்கியத் திருவிழாவில் நான் கலந்துகொண்டு உரையாற்றுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

இலக்கியத்தை, எழுத்தாளர்களை, கலையை, கலைஞர்களைக் கொண்டாடுவதில் கேரளம் எப்போதும் முன்னணியில் இருக்கும் என்பது எனக்கு நன்றாகவே தெரியும்.

**பொய்ச் செய்திகளுக்கு எதிராகப் போராட வேண்டிய முக்கியப் பொறுப்பு!**

என்னுடைய உரைகளை, பாசிஸ்ட்டுகள் தவறாகத் திரித்து, பொய்ச் செய்திகளைப் பரப்பி வரும் இந்தச் சூழலில் நான் மிகுந்த கவனத்துடன் உரையாட வேண்டியிருக்கிறது.

பொய்ச் செய்திகளை எதிர்த்துப் போராடுவதில் நமக்கு மிக முக்கியப் பொறுப்பு இருக்கிறது. சமீபத்தில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில், சாதிப் பாகுபாடற்ற சமத்துவச் சமுதாயத்தை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து, நான் பேசியிருந்தேன்.

என்னுடைய அந்த உரையை, தவறாகத் திரித்து, பா.ஜ.க. தன்னுடைய கீழ்த்தரமான அரசியல் சுயலாபத்துக்காகப் பரப்பி வருகிறது.

இந்தச் சூழலில், என்னுடன் நின்று எனக்கு ஆதரவளித்த கேரள மக்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை, இத்தருணத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திராவிட இயக்கத்துக்கும் இலக்கியத்துக்குமான உறவு!**

என்னை இந்த இலக்கிய விழாவுக்கு அழைத்தமைக்காக உங்களுக்கு எனது நன்றியை உரித்தாக்குகிறேன். இலக்கியம் மற்றும் மொழி ஆகியவற்றின் மீது கட்டியெழுப்பப்பட்ட ஓர் இயக்கத்தைச் சார்ந்தவன் என்கிற முறையிலே என்னை நீங்கள் இந்த விழாவுக்கு அழைத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

நான் இங்கு தி.மு.க. அரசின் பிரதிநிதியாக இருப்பதால், திராவிட இயக்கத்துக்கும் இலக்கியத்துக்கும் இடையே உள்ள உறவைப் பற்றி நான் பேச விரும்புகிறேன்.

நான் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு நான் பங்குபெறும் முதல் இலக்கிய விழா இது. இதற்கு முன்பு சென்னை புத்தகக் காட்சியில் நிறைய முறை பங்கேற்றிருக்கிறேன். உரையாற்றியிருக்கிறேன்.

உங்களில் பலரும் கூட சென்னைப் புத்தகக் கண்காட்சியில் பங்கேற்றிருப்பீர்கள். அங்கு எந்த அளவிலான உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் பங்கேற்றேனோ அதே அளவு உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் நான் இங்கே இருக்கிறேன்.

**தமிழ்நாடு - கேரளம் ஒற்றுமை உறவு !**

உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், `உங்களுடைய நகரம்' என்று சொல்லி, நான் உங்களிடமிருந்து அந்நியப்பட விரும்பவில்லை. இது நம் நகரம். தமிழ்நாட்டுக்கும் கேரளத்துக்கும் இடையே அவ்வளவு ஒற்றுமைகள் இருக்கின்றன.

நமக்கு மொழி மற்றும் பண்பாட்டுத் தளங்களில் ஒரே மாதிரியான அணுகுமுறைகள் இருக்கின்றன. அதன் காரணமாகத் தான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் தென் மாநிலங்களை, `திராவிட நிலம்' என்று அழைத்தார்.

**தமிழர்களின் உரிமைக்காக கேரள தலைவர்கள் போராட்டம்!**

தமிழ்நாட்டின் மூலைமுடுக்கில் இருந்தெல்லாம் தலைவர்கள் வந்து இங்குள்ள மக்களுக்கான உரிமைகளுக்காகப் போராடியிருக்கிறார்கள். அது போலவே, கேரளத்தின் தலைவர்கள் எல்லாம் வீதியில் இறங்கி, தமிழர்களின் உரிமைகளுக்காகத் தமிழ்நாட்டில் வந்து போராடியிருக்கிறார்கள்.

நீதிக் கட்சியைத் தொடங்கிய தலைவர்களில் ஒருவரான டாக்டர் டி.எம்.நாயர் அப்படிப்பட்ட தலைவர்களில் ஒருவர்தான்.

அதுபோலவே, தந்தை பெரியார் இங்கே வந்து, `வைக்கம் கோயிலை'ச் சுற்றியுள்ள தெருக்களில் மக்கள் நுழைவதற்கான போராட்டத்தை மேற்கொண்டார்.

பெரியார் முன்னெடுத்த அந்த வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அந்தப் போராட்ட நூற்றாண்டு விழாவின்போது, எங்கள் முதலமைச்சர் அவர்கள் கேரளத்துக்கு வந்தது நீங்கள் அறிந்ததே.

**கேரள தலைவர்களிடம் கலைஞர் கொண்டிருந்த நட்பு!**

பெரியார் காலத்திலிருந்தே திராவிட இயக்கத்துக்கும் கேரளத்துக்கும் இடையே மிக ஆழமான உறவு இருந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையில்லை.

இதற்கு ஓர் உதாரணமாக, என்னுடைய அனுபவத்திலிருந்தே ஒரு விஷயத்தைச் சொல்ல முடியும். தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்கள், கேரளத்தின் புகழ்பெற்ற முதலமைச்சர்க ளாகத் ஈ.கே.நாயனார், அச்சுத மேனன் மற்றும் உம்மன் சாண்டி ஆகியோருடன் அழகான நட்பைக் கொண்டி ருந்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் - தமிழ்நாட்டின் முதலமைச்சரும் அதே மாதிரியான நல்லுறவை கேரளத்துடனும் - கேரள மாநிலத் தலைவர்களுடன் கொண்டிருக்கிறார்கள்.

கண்ணூர் பல்கலைக்கழகத்தின் இலக்கியத் திருவிழாவைப் பொறுத்த அளவில், இது தென்னிந்தியாவின் இதயமாக இருக்கிற, நம் மொழிகளை, பண்பாட்டை, சித்தா ந்தங்களைக் கொண்டாடும் ஒரு விழாவாக இருக்கிறது. இந்த நாட்டிலேயே அரசியல் மற்றும் பண்பாட்டு ரீதியில், தென்னிந்திய மாநிலங்கள் தான் மிகவும் ஆற்றலுடன் செயல்படுகின்றன.

சுற்றுலாவுக்கு மிகச் சிறந்த இடமாக கேரளம் இருக்கிறது. சுற்றுலாவில் பலவிதமான சுற்று லாக்கள் இருக்கின்றன. தமிழ்நாடு மருத்துவச் சுற்றுலாவுக்குப் பெயர் பெற்றது.

இந்த இடத்தில் நான் கேரள அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால்,, கண்ணூரில் அரசியல் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதுதான். அந்த அளவுக்கு இந்த மாவட்டத்தில் அரசியல் நடவடிக்கைகள் இருக்கின்றன. இங்கிருந்து

## 2024 - நாடாளுமன்றத் தேர்தலில் - இந்திய ஒன்றியத்தையும், மாநிலங்களையும் பாதுகாக்க பாசிச பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும்!

தான் கேரள முதலமைச்சர் திரு.பினராயி விஜயன் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்பது மிகவும் முக்கியமான விஷயம்.

**அரண்களாகும் திராவிட இயக்கப் படைப்புகள்!**

தமிழ்நாடும் கேரளமும் மிகவும் வளமான இலக்கிய வரலாற்றைக் கொண்டுள்ளன. தமிழ்நாட்டின் இலக்கிய வரலாறு என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது.

நமது திராவிட அரசியல் என்பது அத்தகைய வளமான இலக்கியத்தின் மீது எழுப்பப்பட்டுள்ளது. எங்கள் தலைவர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என எல்லோருமே தங்கள் எழுத்துகள் மூலம் திராவிட இயக்கத்தை வளர்த்தார்கள்.

அதனால்தான் திராவிட இயக்கத்தை, `எழுதியும்பேசியும் வளர்ந்த இயக்கம்' என்பார்கள். திராவிட இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் மட்டுமே 100க்கும் அதிகமான இதழ்களை நடத்தினார்கள். முடிவெட்டும் கடைகள் - டீ கடைகளைப் படிப்பகம் ஆக்கினார்கள்.

அவர்களின் எழுத்துகளும் இலக்கியப் படைப்புகளும் இதுநாள் வரையும் எங்களுக்கு உந்துசக்தியாக இருந்துகொண்டிருக்கின்றன. அது வருங்காலத்திலும் அப்படியே இருக்கும் என்பதை நான் நிச்சயமாக நம்புகிறேன். அந்த திராவிட இயக்கத் தலைவர்களின் எழுத்துகளும் சிந்தனைகளும் படைப்புகளும்தான் தமிழ்நாட்டில் அழிவு சக்திகள் நுழைய முடியாத அளவுக்குப் பாதுகாப்பு அரண்களாக இருக்கின்றன.



**தமிழ்நாட்டில் அரசியல் சூழலை மாற்றிக் காட்டிய மொழிப்போர்!**

எந்த ஓர் இலக்கியத்துக்கும் மொழிதான் வேர். அந்த மொழியைக் காப்பாற்ற திராவிட இயக்கம் இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தை மிக வலுவாக முன்னெடுத்ததை அனைவரும் அறிவர். 1930 மற்றும் 1960களில் தமிழ்நாட்டில் நடைபெற்ற இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டங்கள் தான், எங்கள் மாநிலத்தின் அரசியல் சூழலை மாற்றியமைத்தன.

**என்னை இந்த இலக்கிய விழாவுக்கு அழைத்தமைக்காக உங்களுக்கு எனது நன்றியை உரித்தாக்குகிறேன். இலக்கியம் மற்றும் மொழி ஆகியவற்றின் மீது கட்டியெழுப்பப்பட்ட ஓர் இயக்கத்தைச் சார்ந்தவன் என்கிற முறையிலே என்னை நீங்கள் இந்த விழாவுக்கு அழைத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். நான் இங்கு தி.மு.க. அரசின் பிரதிநிதியாக இருப்பதால், திராவிட இயக்கத்துக்கும் இலக்கியத்துக்கும் இடையே உள்ள உறவைப் பற்றி பேச விரும்புகிறேன்.**

நாங்கள் இந்திக்கோ, எந்த மொழிக்கோ எதிரானவர்கள் அல்ல. ஆனால், கட்டாயப்படுத்திப் படிக்க வேண்டும் என்று சொல்கிற போது - அந்தப் பாசிச மனநிலையைத்தான் அன்றைக்கு எதிர்த்தோம். ஒன்றிய அரசால், இன்றைக்கும் எதிர்க்கிறோம்.

கேரளமும் இந்த விஷயத்தில் விதிவிலக்கு அல்ல என்று நம்புகிறேன். தமிழ்நாட்டுடன் இணைந்து கேரளமும் முன்னேற்றப் பாதையை வகுத்துக் கொடுத்து, அடிப்படைவாத சக்திகளுக்கு எதிராக எப்படிப் போராட வேண்டும் என்பதை இந்த நாட்டின் பிற மாநிலங்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறது.

அதைப் பற்றிச் சிந்திக்கும்போது, தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்குக் காரணமாக இருந்த வேர்களை நான் திரும்பிப் பார்க்கிறேன்.

**எதிரிகள் அஞ்சும் கலைஞரின் பேனா!**

1952. தமிழ்த் திரை உலகத்தின் முகத்தை மாற்றியது ஒரு தமிழ்ப் படம். அந்தப் படம், அதுவரையில் திரையில் காட்டப்பட்டு வந்த அரசியலையும் சமுதாயத்தையும் வலுவாக அசைத்துப் பார்த்தது. இன்று வரையிலும் அது காலம் கடந்து நிற்கும் ஒரு செவ்வியல் படைப்பாகவும், இன்றும் பல தளங்கில் பொருத்தமாக அமையும் படமாகவும் நிலைபெற்றிருக்கிறது.

அந்தப் படத்தை, திராவிட இயக்கத்தின் முன்னோடி எழுத்தாளர்களில் ஒருவர்தான் எழுதினார். அந்தப் படம், ‘பராசக்தி’. அதை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர். அந்த உயரிய படைப்பு, இன்று வரைக்கும் முற்போக்கு எழுத்தாளர்களுக்கும், தமிழ் சினிமா நடிகர்களுக்கும் ஒரு கையேடாக இருந்து வருகிறது.

‘பராசக்தி’யின் மையமாக, சமூகத்தின் மீதான ஆற்றல் வாய்ந்த ஒரு விமர்சனம் இருந்தது. சுதந்திரத்துக்குப் பிறகான இந்தியாவில் நிலவிய பல்வேறு சமூகப் பிரச்சினைகளை அது படம்பிடித்துக் காட்டியது. சாதிப் பாகுபாடு, ஆன்மிகத்தின் பெயரால் நடைபெறும் மோசடிகள் மற்றும் சாமானிய மக்களின் போராட்டங்கள் ஆகியவற்றை மிகத் துணிச்சலாக அந்தப் படம் பேசியது.

பல இலட்சக்கணக்கான மக்களைப் பாதிக்கும், தொடர்ந்து பின்பற்றப்படும் சமூகப் படிநிலைகளுடன் இந்தியா மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும் இந்த நாளிலும், சாதி பாகுபாடு தொடர்பாக அந்தப் படம் காட்டிய விஷயங்கள், இன்றளவும் மிகப் பொருத்தமாக இருக்கின்றன.

`பராசக்தி' அன்றைக்கு இருந்த சமூக அவலங்களைப் பற்றி மட்டும் பேசவில்லை. நிறைய இளைஞர்கள் - பிற்படுத்தப்பட்ட - ஒடுக்கப்பட்ட மக்கள் அரசியலை நோக்கி வரவும் காரணமாக அமைந்தது.

இந்த விஷயங்களை எல்லாம் எழுபது ஆண்டுகளுக்கு முன்பே சொல்லியிருக்கிறார்கள் என்றால் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். ஒரு பேனாவின் மூலமாக ஒரு மிகப் புரட்சி எப்படி ஏற்பட்டது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அதை நீங்கள் உணர்ந்துகொண்டால், இன்று வரையிலும் கலைஞரின் பேனா என்பது எதிரிகளுக்கு ஏன் அச்சமூட்டக் கூடிய பொருளாக இருக்கிறது என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடியும். பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோரிடமிருந்து தான் தனக்கான உந்துவிசையைக் கலைஞர் பெற்றார்.

**நூறு ஆண்டுகளுக்கு முன்பே பெண்ணியம்!**

தமிழ்நாட்டில், இந்த மூவரும்தான் திராவிட இயக்கத்தின் முதுகெலும்பாக இருந்தார்கள். தங்கள் வாழ்நாள் முழுவதும் ஆயிரக்கணக்கான பக்கங்களில் சுயமரியாதை மற்றும் முற்போக்குச் சிந்தனைகளை எழுதி, அவற்றைத் தமிழ்நாட்டின் தனித்தன்மைகளாக மாற்றியதற்கு நாங்கள் மிகவும் நன்றி கடன்பட்டிருக்கிறோம்.

தங்களின் மரணம் வரையிலும் அவர்கள் எழுதிக் கொண்டே இருந்தார்கள். பல இலட்சக்கணக்கான ஒடுக்கப்பட்டவர்கள், விளிம்புநிலை மக்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அவர்கள் எழுதினார்கள். அவர்களின் எழுத்துகள் என்ன செய்தன என்று உங்களுக்குத் தெரியுமா? அவை பிற்போக்கு சக்திகளை விரட்டியடித்தன.

அந்த மாபெரும் புரட்சியைத் தொடங்கிய பெரியாரில் இருந்தே நான் தொடங்குகிறேன். அவர் எவ்வளவுக்கு எவ்வளவு ஒரு தலைவராக இருந்தாரோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவர் ஓர் எழுத்தாளராகவும் இருந்தார். இந்த மாநிலத்தையும் மக்களையும் நித்திரையில் இருந்து விழிக்கச் செய்ய அவர் எழுதினார்.

அவருடைய எழுத்துகளும் பேச்சுகளும் அதுவரையில் மண் மூடியிருந்த திராவிட மக்களின் வரலாற்று மற்றும் பண்பாட்டு அடையாளங்களை மீட்டுக் கொண்டு வந்தன. அவர்களுக்கென்று ஒரு தனித்த அடையாளத்தைக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்த்தின.

**பெண் ஏன் அடிமையானாள்? தந்தை பெரியார் எழுதிய நூல்!**

இன்றைக்கு நாம் பெண்ணியம் பேசும் இலக்கியப் படைப்புகளை அதிகளவில் பார்க்கிறோம். ஆனால் நூறு ஆண்டுகளுக்கு முன்பே, ‘பெண் ஏன் அடிமையானாள்?’ என்கிற புத்தகத்தை அவர் எழுதினார். இன்று வரையிலும் அந்தப் புத்தகம் மிகச் சிறப்பாக விற்பனையாகி வருகின்றது.

சொல்லப்போனால், பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் உரிமை ஆகியவற்றுக்குக் குரல் கொடுத்து, தன் காலத்துக்கு முந்தியிருந்தார் பெரியார். பெண்கள் மீதான ஒடுக்குமுறை குறித்து அவரது எழுத்துகள் பேசின. ஆணாதிக்கத்தை உடைத்தெறிய அவர் கடுமையாக உழைத்தார். தன்னுடைய சிந்தனைகளுக்குச் செயல் வடிவமும் கொடுத்தார். மேற்கத்திய நாடுகள் ‘பெண்களுக்கு வாக்குரிமை’ என்பதைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன்பே அல்லது அதைச் செயல்படுத்துவதற்கு முன்பே, பெண்கள், கணவரை இழந்தவர்கள், பாலியல் தொழிலாளிகள், குடும்பத்தால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து 1929ஆம் ஆண்டு, சுயமரியாதை மாநாடு ஒன்றை பெரியார் நடத்தினார்.

சாதி முறை குறித்து அவர் எழுதிய விஷயங்கள்தான், சமூகநீதி மற்றும் சமத்துவம் குறித்த பரவலான உரையாடலுக்கு அடிகோலியது.

சுயமரியாதைத் திருமணங்கள் குறித்து வலுவாகப் பேசி வந்த அவர், தன்னுடைய படைப்புகளில் அத்தகைய திருமணங்களின் கொள்கைகள், முக்கியத்துவம் ஆகியவை குறித்து எழுதியிருக்கிறார்.

**சுயமரியாதைத் திருமணங்களை சட்டமாக்கிய அண்ணா!**

பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் எங்களது தி.மு.க. அரசு ஆட்சியமைந்தவுடன், 1967ஆம் ஆண்டு சுயமரியாதைத் திருமணங்களுக்குச் சட்ட ரீதியான அங்கீகாரத்தை வழங்கியது.

“யார் சொல்லியிருந்தாலும் எங்கு படித்திருந்தாலும் நானே சொன்னாலும், உனது புத்திக்கும் பொது அறிவுக்கும் பொருந்தாத எதையும் நம்பாதே” என்பதைத்தான் பெரியார் எங்களுக்குச் சொல்லிச் சென்றார். எதையும் பகுத்தறிய வேண்டும். கேள்வி கேட்க வேண்டும் என்பதுதான் பெரியார் எங்களுக்குச் சொன்னது.

அதை இன்றளவும் தி.மு.க பின்பற்றி வருகிறது என்பதை நான் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன். நாங்கள் ஆட்சியில் இருக்கிறோமோ, இல்லையோ... ஆனால், எப்போதும் பெரியார் எந்த விஷயங்க ளுக்காகக் களமாடினாரோ, அந்தப் போராட்டங்களைத் தி.மு.க. முன்னெடுத்துச் செல்லத் தவறியதில்லை.

**தொடரும் பாரம்பரியம்!**

தி.மு.க.வின் நிறுவனரும், முன்னாள் முதலமைச்சருமான பேரறிஞர் அண்ணாவின் இலக்கிய நிபுணத்துவத்தைப் பற்றிப் பேச எனக்குச் சொற்கள் போதாது. அவர் ‘பேரறிஞர்’ என்ற பட்டத்தைப் பெற்றதே, அவருடைய அறிவாளுமை மற்றும் பேச்சுத் திறனால்தான்.

அவருடைய நாடகங்களும் கதைகளும் சமுதாயத்தில் நிலவி வந்த சமூக அநீதிகளைப் படம்பிடித்துக் காட்டின. சமூக நீதி, பொருளாதாரம், மாநில உரிமை, மொழி உரிமை மற்றும் இன்னும் பல விஷயங்களைப் பற்றி அண்ணா எழுதினார்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என மூவருமே, பழமையான இலக்கியப் படைப்புகளை விமர்சித்தது மட்டுமல்லாமல், பகுத்தறிவையும் பரப்பினார்கள்.

தமிழில் உள்ள வளமான இலக்கியத்தைச் சாமானிய மக்களுக்கு அவர்கள்தான் காட்டினார்கள். திராவிட இயக்கம் தோன்றுவதற்கு முன்பு, பக்தி இலக்கியம் மட்டுமே இலக்கிய உலகில் முதன்மையானது என்று மக்கள் நம்பிக் கொண்டிருந்தார்கள். திராவிட இயக்கம் வந்த பிறகே, சாமானிய மக்களுக்காகவே எழுதப்பட்ட திருக்குறள் மற்றும் சங்க இலக்கியங்கள் ஆகியவற்றின் மீது பரவலான ஒளி பாய்ச்சப்பட்டது.

குறிப்பாக, திருக்குறளுக்குக் கலைஞர் தன்னுடைய பாணியில் உரை எழுதியிருக்கிறார். அதிலிருந்து ஒரே ஓர் உதாரணத்தை மட்டும் காட்ட விரும்புகிறேன்.

‘தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை’ என்கிறது குறள்.

பலரும் இதை, ‘கடவுளை அல்லாது கணவனை வணங்கும் பெண் சொன்னால், சொன்னவுடனே மழை பெய்யும்’ என்று அர்த்தப்படுத்திக் கொள்கிறார்கள்.

ஆனால் கலைஞர் இதற்கு வேறு ஒரு பொருளைத் தருகிறார். அதை அறிந்துகொள்வதன் மூலம், திராவிட இயக்கம் எவ்வளவு தொலைநோக்குடன் இயங்கி இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள முடியும்.

கணவன் வாக்கினை கடவுள் வாக்கினை விட மேலானதாகக் கருதி அவனையே

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

# பெரியார் காலத்திலிருந்தே திராவிட இயக்கத்துக்கும், கேரளத்துக்கும் ஆழமான உறவு!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை... 5 ஆம் பக்கத் தொடர்ச்சி

தொழுதிடும் மனைவி, பெய் என ஆணையிட்டவுடன் அஞ்சி நடுங்கிப் பெய்கின்ற மழையை போலத் தன்னை அடிமையாகக் எண்ணிக் கொள்பவள்.

ஒவ்வொருவரும் தங்கள் வசதிக்கேற்ப அர்த்தப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை திருக்குறள் வழங்குகிறது. எனினும், கலைஞர் தரும் விளக்கமோ, திராவிட இயக்கத்தின் கொள்கையைப் பறைசாற்றுகிறது. அத்தகைய ஒரு முற்போக்கான, தொலைநோக்குடன் சிந்திக்கும் ஓர் இயக்கத்தின் பிரதிநிதியாக நான் இங்கே நிற்கிறேன் என்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

**நம் தலைவர், முதல்வர் எழுதிய "உங்களில் ஒருவன்" நூல்!**

தன்னுடைய வழிகாட்டிகளைப் போலவே, எனது தந்தை, கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் 'உங்களில் ஒருவன்' என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார். அது பிற்பாடு ஆங்கிலத்தில் 'ஒன் அமங் யூ' என்ற தலைப்பில் பத்திரிகையாளர் ஏ.எஸ். பன்னீர்செல்வம் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

எப்படித் திராவிட இயக்கத் தலைவர்கள் இலக்கியத்திற்கும் - வாசிப்புக்கும் முக்கியத்துவம் தந்தார்களோ, அதே வழியில் தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் செயல்பட்டு வருகிறார்கள்.

அண்ணா நூற்றாண்டை முன்னிட்டு, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 2009ஆம் ஆண்டு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை சென்னையில் திறந்தார்கள்.

இன்றைக்கு, கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, ரூ.250 கோடியில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை மதுரையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள்.

நான் தமிழ்நாடு அரசின் அமைச்சர் மட்டுமல்ல. திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் செயலாளராகவும் இருக்கிறேன். கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, தி.மு.கழக இளைஞர் அணி சார்பில் தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளிலும் 'கலைஞர் நூலகங்களை'த் திறக்க எங்கள் தலைவர் அறிவுறுத்தினார்கள். அந்தப் பணியைத் தற்போது தொடங்கியுள்ளோம்.

**திராவிட இயக்கத்தின் வழிகாட்டி எழுத்துகள்!**

கழகத்தின் குரலாக இருக்கும் 'முரசொலி', முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், கையெழுத்து வாரப் பத்திரிகையாகத் தொடங்கப்பட்டது. 'முரசொலி'யை கலைஞர் தன் 'மூத்த பிள்ளை' என்பார். இன்று அது 75 ஆண்டுகளைக் கடந்து வெளிவரும் நாளிதழாக வளர்ந்திருக்கிறது.

அந்த இதழில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'உடன்பிறப்பே' என்ற தலைப்பில், ஆயிரக்கணக்கான கடிதங்களைத் தனது உடன்பிறப்புகளுக்காக இறுதி வரையில் எழுதி வந்தார். நெருக்கடி நிலை கால கட்டத்தில், அதை எதிர்ப்பதில் முன்னணியில் நின்றது 'முரசொலி'.

தற்போது, 'முரசொலி'யில் நமது முதலமைச்சர் அவர்களும் அரசியல் தெளிவூட்டும் கடிதங்களை எழுதி வருகிறார். அது மட்டுமல்லாமல், தி.மு.க. இளைஞர் அணியின் சார்பாக, 'முரசொலி'யில், 'முரசொலி பாசறை பக்கம்' என்ற பெயரில், 2023 ஜனவரி முதல் தனிப் பக்கம் ஒன்றையும் கொண்டு வந்திருக்கிறோம். இந்தச் சிறப்புப் பக்கத்தின் முதன்மையான நோக்கம், இன்றுள்ள இளைஞர்களுக்குத் திராவிட இயக்கத்தின் வரலாற்றையும் சித்தாந்தத்தையும் எடுத்துச் செல்வது என்பதே!

திராவிட இயக்கத்தில் பங்குகொண்ட பெண் எழுத்தாளர்கள் சிலரது பெயர்களைப் பற்றியாவது நான் இங்குக் குறிப்பிடாமல் போனால், எனது உரை நிறைவடையாது.

**திராவிட இயக்கத்தின் பெண் எழுத்தாளர்கள்!**

அன்னை மணியம்மையார், திருச்சி நீலாவதி, பெனாங்க் ஜானகியம்மாள் - டாக்டர் தர்மாம்பாள், மூவலூர் இராமாமிர்தம், மரகத வள்ளியார் and மலர்முகத்தம்மையார் போன்றோர் திராவிட இயக்கத்தில் பங்கேற்று, சுயமரி யாதை மற்றும் பெண்கள் மேம்பாடு குறித்து நிறைய எழுதியிருக்கிறார்கள். அதிலும் மரகதவள்ளியார், ஆதி திராவிடர்களின் துயரங்க ளைப் பற்றி மிகவும் விரிவாக எழுதியிருக்கிறார்.

ஒரு மாநிலத்தை உருவாக்குவதில் இலக்கியம் மிக முக்கியப் பங்காற்றுகிறது என்று நாங்கள் நம்புகிறோம். எங்களது தலைவர்களின் எழுத்துகள் எங்களை வழிகாட்டுகளாக இருக்கும் வரை, தமிழ்நாடு முன்னேறிய, முற்போக்கு மாநிலமாக இருந்துகொண்டிருக்கும்.

**ஒன்றிய அரசின் தவறான அணுகுமுறை!**

தி.மு.க. எப்போதும் விட்டுக்கொடுக்காத இன்னொரு விஷயம், கூட்டாட்சி எனும் சிந்தனை. 1949 ஆம் ஆண்டுத் தி.மு.க. தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே நாங்கள் மாநில உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வருகிறோம்.

'அனைத்துக்கும் ஒரே அளவு பொருந்தும்' என்கிற முறை, இந்தியா போன்ற பன்மைத்துவம் கொண்ட நாட்டுக்கு ஒத்துவராது என்பதில் நாங்கள் ஆழமான நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

தனது மக்களுக்கு என்ன வகையான நலத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த வேண்டும் என்பது குறித்து ஒவ்வொரு மாநிலத்துக்கும் போதுமான அளவு சுதந்திரம் கொடுத்து, விரிவான கொள்கைகளை ஒன்றிய அரசு வடிவமைக்க வேண்டும்.

இந்த அணுகுமுறை மூலம், மாநிலங்கள் தனித்துவமான, புதுமையான திட்டங்களைத் தீட்டும். அதன் மூலம், வெவ்வேறு மாநிலங்கள் அத்தகைய திட்டங்களில் இருந்து சிறந்த நடைமுறைகளைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**திராவிட மாடல் ஆட்சியில் ஏற்பட்டுள்ள கல்விப் புரட்சி!**

தமிழ்நாட்டில் கல்லூரிகளுக்கு உயர் கல்வி கற்கச் செல்லும் மக்களின் எண்ணிக்கை, அதாவது, 'கிராஸ் என்ரோல்மெண்ட் ரேஷியோ', 50 சதவீதமாக இருக்கிறது. இது அமெரிக்காவைக் காட்டிலும் சிறந்த எண்ணிக்கை. அங்கு இது 41 சதவீதமாக மட்டுமே இருக்கிறது. மட்டுமல்லாமல், பல ஸ்காண்டிநேவிய நாடுகளுடன் ஒப்பிடும் அளவுக்கும் தமிழ்நாட்டின் இந்தச் சாதனை இருக்கிறது. திராவிட மாடல் ஆட்சிக்கு இது ஒரு சிறந்த சான்று.

இவையெல்லாம் சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே. தமிழ்நாட்டைப் போலவே, வேறு சில மாநிலங்கள், வேறு சில துறைகளில் மிக நன்றாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கலாம். மாநிலங்கள் ஒவ்வொன்றும் இன்னொரு மாநிலத்திடமிருந்து பரஸ்பரம் கற்றுக் கொண்டு, பொருத்தமான நடைமுறைகளைத் தத்தமது மாநிலங்களில் செயல்படுத்தலாம். ஆகவேதான், தங்கள் மாநிலத்துக்குப் பொருந்தி வரக் கூடிய மக்கள் நலத் திட்டங்களைத் தீட்ட, மாநில அரசுகளுக்கு உரிமை வேண்டும் என்றும், அந்தத் திட்டங்களைச் செயல்படுத்த உதவி புரியும் உந்து சக்தியாக ஒன்றிய அரசு இருந்தால் போதுமென்றும் நாங்கள் வாதிடுகிறோம். உண்மையான கூட்டாட்சி என்பது இப்படியாகத்தான் இருக்க முடியும்.

ஆனால் துர்பாக்கியமாக, கடந்த சில ஆண்டுகளாக, ஒன்றிய அரசு இந்த அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவில்லை. மாறாக, எந்தெந்த வழியில் எல்லாம் அதிகாரத்தைத் தன்னிடம் மட்டுமே வைத்துக் கொள்ள முடியுமோ, அந்தந்த வழிகளில் செயல்பட்டு, தனது இஷ்டத்துக்கு மாநில அரசுகளை ஆட்டுவிக்கிறது ஒன்றிய அரசு.

நாடு முழுவதிலும் சுதந்திரமான விசாரணை அமைப்புகளை, தன் அரசியல் எதிரிகளை வேட்டையாடுவதற்காக ஒன்றிய அரசு பயன்படுத்தி வருகிறது.

**பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் ஆளுநர்களின் மாநில நிர்வாகச் சீர்குலைப்பு!**

பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்களுக்குத் தனது ஆட்களை ஆளுநர்களாக அனுப்பி அந்த மாநிலங்களின் நிர்வாகத்தைச் சீர்குலைத்து வருகிறது. அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் தமிழ்நாட்டு ஆளுநர் இருந்து வருகிறார்.

மிகச் சமீபமாக, தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்புச் சீரழித்து, எங்களைப் பின்னுக்கு இழுக்கும் நடவடிக்கை ஒன்றை ஒன்றிய அரசு எடுத்திருக்கிறது. அதுதான், தேசிய மருத்துவக் கவுன்சில் மூலம் வெளியிடப்பட்ட நெறிமுறைகள். அதன் படி, ஒவ்வொரு 10 இலட்சம் பேருக்கு, 100 எம்.பி.பி.எஸ். சீட்டுகள் மட்டுமே இருக்க வேண்டும் என்ற விகிதாசா ரத்தைப் பின்பற்ற வேண்டும் என்று ஒன்றிய அரசு கூறு கிறது. இது, தமிழ்நாடு, கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களை வெகுவாகப் பாதிக்கும்.

ஆனால் இதற்கு எதிராக எங்களது முதலமைச்சர் அவர்கள் குரல் கொடுத்தவுடன், அந்த நடவடிக்கையைத் தற்காலிகமாக ஒன்றிய அரசு நிறுத்தி வைத்துள்ளது.

**மாநிலங்களின் வளர்ச்சியே, நாட்டின் வலிமை!**

இன்று நாம் கூடியிருப்பது, நம் இலக்கிய வளங்களைப் பற்றிப் பேசி கலைந்து செல்வதற்காக மட்டும் அல்ல. நம்முடைய அடையாளத்தை, போராட்டங்களை, விருப்பங்களை வரையறுக்கும் வளமான மொழிப் பாரம்பரியத்தைக் கௌரவப்படுத்தும் நிகழ்வாகவும் இதைக் கருத வேண்டும்.

வெறும் தொடர்பு கொள்ளும் ஊடகமாக மட்டுமே நமது மொழிகள் இருக்கவில்லை. அவை நம் பண்பாட்டின் விழுமியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. நம் முன்னோர்களின் சிந்தனைகளையும், வெற்றிகளையும் எதிரொலிக்கின்றன. அவர்கள் முன்னெடுத்த போராட்டங்களின் வெளிச்சத்தை நமக்குக் கைமாற்றிச் செல்கின்றன.

ஒருவர் எந்த மொழியில் பேசினாலும், தனது பண்பாட்டின் தொடர்ச்சியைப் பற்றிப் பேசவும், படிக்கவும், பாதுகாக்கவும் அவருக்கு உரிமை உண்டு. அந்த உரிமையைப் பேணுவதில் நம் ஒவ்வொருவருக்கும் பொறுப்பு உள்ளது.

நம் உரையாடலின் இன்னொரு மையமாக இருக்கும் மாநில உரிமை என்பது, சுய நிர்ணயம் மற்றும் சுயாட்சிக்கான சின்னமாக விளங்குகிறது.

முன்னேற்றம் என்பது, ஒவ்வொரு பகுதிக்கும் வள ஆதாரங்களையும், வாய்ப்புகளையும் சுயாட்சியையும் வழங்குவதே. அப்போதுதான் அனைத்துத் துறைகளிலும் முழுமையான மேம்பாட்டைக் காண இயலும். தனது மாநிலங்களுக்குச் சமமான வளர்ச்சியை உறுதி செய்வதில்தான் ஒரு நாட்டின் வலிமை இருக்கிறது என்பதை உணரும் போதுதான் முன்னேற்றம் பிறக்கும்.

'வேற்றுமையில் ஒற்றுமை' என்பதே நமது பலம். நமது மொழிகளும், பண்பாடும், வழமைகளும் தடைகள் அல்ல. அவை வேறு வேறு மாநிலங்களைச் சேர்ந்த மக்களுடன் சேர்ந்து மானுட நேயத்தைக் கொண்டாடுவதற்கான பாலங்கள்.

**மொழி, மாநில உரிமைகள், நம் பண்பாட்டு அடையாளங்களை காப்போம்!**

இறுதியாக, மொழி உரிமைகள் மதிக்கப்படவும், மாநில உரிமைகள் உயர்த்திப் பிடிக்கப்படவும், பண்பாட்டு அடையாளங்கள் சிறப்பிக்கப்படவுமான ஒரு வருங்காலத்தை நாம் அனைவரும் கனவு காண்போம்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து, ஒவ்வொரு மொழியும் வளரவும், ஒவ்வொரு பண்பாடும் பெருகவும், ஒவ்வொரு தனிநபரும் தன்னுடைய பாரம்பரியத்தில் பெருமை கொள்ளவும் ஒரு புதிய சகாப்தத்தை நாம் எழுதுவோம். நம் நாட்டின் மாநில மொழிகளைப் பாதுகாக்க இலக்கிய வளத்தைப் பாதுகாக்க - மாநில உரிமை - கல்வி உரிமை காக்க தமிழ்நாடு மற்றும் கேரள மக்கள் இணைந்து பாடுபடுவோம்.

2019 நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் பா.ஜ.க. முழுமையான தோல்வியைத் தழுவியது. இந்த இரண்டு மாநிலங்களிலும் அந்தக் கட்சி ஒரு இடத்தைக் கூட வெல்ல முடியவில்லை.

**பிரித்தாளும் சக்திகளுக்கு நம் மாநில மக்கள் எதிரானவர்கள்!**

நமது மக்கள் எவ்வளவு தூரம் முற்போக்கானவர்கள், பிரித்தாளும் சக்திகளுக்கு எவ்வளவு தூரம் எதிரானவர்கள் என்பதைக் காட்டுவதற்குப் பா.ஜ.க.வின் அந்தத் தோல்வி சான்றாக இருக்கிறது. 2024 ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்றத் தேர்தல்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. இந்திய ஒன்றியத்தையும், நமது மாநிலங்களையும் பாதுகாக்க, பாசிச பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும். அந்தப் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.


> **திராவிட இயக்கத்தை, 'எழுதியும் பேசியும் வளர்ந்த இயக்கம்' என்பார்கள். திராவிட இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் மட்டுமே 100க்கும் அதிகமான இதழ்களை நடத்தினார்கள். முடிவெட்டும் கடைகள் - டீ கடைகளைப் படிப்பகம் ஆக்கினார்கள்.**
>
> **அவர்களின் எழுத்துகளும் இலக்கியப் படைப்புகளும் இதுநாள் வரையும் எங்களுக்கு உந்துசக்தியாக இருந்துகொண்டிருக்கின்றன. அது வருங்காலத்திலும் அப்படியே இருக்கும் என்பதை நான் நிச்சயமாக நம்புகிறேன். அந்த திராவிட இயக்கத் தலைவர்களின் எழுத்துகளும் சிந்தனைகளும் படைப்புகளும்தான் தமிழ்நாட்டில் அழிவு சக்திகள் நுழைய முடியாத அளவுக்குப் பாதுகாப்பு அரண்களாக இருக்கின்றன.**

---

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கே.பி.என். மாயன்

**டிசம்பர் 1 (2013)**



**கொடைக்கானல் நகரச் செயலாளராக தொடர்ந்து 38 ஆண்டுகள் சிறப்புறப் பணியாற்றியவர். திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**'மிசா' சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறை வாசமும் – இந்தி எதிர்ப்பு, சட்டநகல் எரிப்பு, ஈழத் தமிழர் ஆதரவு ஆகிய போராட்டங்கள் மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**கொடைக்கானல் நகராட்சி, நகரியக் குழு உறுப்பினராகவும், கொடைக்கானல் கூட்டுறவு பண்டகசாலைத் தலைவராக இரண்டு முறையும் – கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## ஒழுங்கு நடவடிக்கை!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தேனி தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் குரு.இளங்கோ கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப் படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 30.11.2023

**துரைமுருகன்,**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்! புதுக்கோட்டை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்

## நவம்பர் 27ல் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

### அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் வழங்கப்பட்டது!

புதுக்கோட்டை, டிச. 1 - கழக இளைஞர் அணி செயலாளர் , இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் நவம்பர் 27ல் அறந்தாங்கி அரசு மருத்துவ மனையில் பிறந்த 6 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி தலைமையில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில் கழக தேர்தல் பணிகள் செயலாளர் பரணி இ.ஏ.கார்த்திகேயன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஞான. இளங்கோவன், அடைக்கலம், மாவட்ட பொருளாளர் அபுதாஹிர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர். ஆர்.கே.கலைமணி,

அறந்தாங்கி நகரக் கழக செயலாளர் க.ராஜேந்திரன், ஒன்றியச் செயலாளர்கள் வே.பொன்துரை, பொன். கணேசன். எஸ்.எம்.சீனியார், வி.ஆர்.இளையராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் த.மணிராஜன், துணை அமைப்பாளர்கள் இரா.தமிழ்ராசு, நசுருதீன். முகம்மது ரபீக், அருண்குமார், கவிக்குமார், இளையராஜா, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தி.முத்து, ஹரி விமலாதி, சிவ.பால இளங்கோ, சுந்தர பாண்டியன், சக்திவேல், சேக் இஸ்மாயில் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் மாபெரும் இரத்ததான முகாம் நடைபெற்றது,

---

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மிசா பா. நாகலிங்கம்

**டிசம்பர் 1 (2006)**



**கழகத்தில் 1953ஆம் ஆண்டு உறுப்பினராகி பின்னர், 1957 முதல் 1967 வரை பொன்னேரி வட்டக் கழகப் பொருளாளராகப் பணியாற்றினார்.**

**1967 மற்றும் 1971 ஆகிய இரண்டு முறை பொன்னேரி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்று, தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம், மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**நெருக்கடிகாலத்தில் 'மிசா' கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



சென்னை, கலைவாணர் அரங்கில், நேற்று முன்தினம் (29.11.2023) பொதுப்பணித்துறையின் மூலம் கட்டப்படும் கட்டடங்களில், "உள்கட்டமைப்பில் நவீன தொழில்நுட்பம்" குறித்து கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் பி.சந்திரமோகன், முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர்கே.ஆயிரத்தரசு ராஜசேகர் மற்றும் மண்டலத் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் பொதுப்பணித்துறையின் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

சிறந்த நிர்வாகம் - வெளிப்படைத் தன்மையை நிலைநாட்டிட

# மாநிலம் முழுவதும் பொதுப்பணித்துறை கணினிமயமாக்கப்பட்டுள்ளது!

## கருத்தரங்கில் அமைச்சர் எ.வ.வேலு தகவல்!

சென்னை, டிச. 1 -

பொதுப்பணித்துறையில் மூலம் கட்டப்படும் கட்டடங்களில், "உள்கட்டமைப்பின் நவீன தொழில்நுட்பம்" குறித்து கருத்தரங்கம், நேற்று முன்தினம் (29.11.2023) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, இக்கருத்தரங்கை தொடங்கிவைத்தும், 'கட்டட மலர்' என்ற காலாண்டு முதல் இதழை வெளியிட்டும் உரையாற்றினார்.

அப்போது அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது :

மனித வரலாற்றில் சக்கரம் கண்டுபிடித்த நாள் ஒரு திருப்பு முனை, மனித உழைப்பை எளிதாக்கியது அந்தக் கண்டுபிடிப்புத்தான், பொறியியலின் தொடக்கமும் அதுதான், பொறியியல் என்பதே மனிதனின் இடர்பாடுகளைக் குறைப்பதுதானே, தொடக்கத்தில் பொறியியலில் இரண்டே பிரிவுகள் இருந்தன, ஒன்று போர்ப் பொறியியல், இன்னொன்று மக்களுக்கான பொறியியல்.

இரண்டாவது சொன்னதுதான், சிவில் இன்ஜினியரிங் - நீங்கள் படித்த பாடம், அந்த சிவில் இன்ஜினியரிங் இன்று நூற்றுக்கணக்கில் பிரிந்து மனிதனுக்குத் தொண்டாற்றி வருகிறது. மனிதன் வளரும் போது, தேவைகள் பெருகுகின்றன. தேவைகள் புதிய கண்டுபிடிப்புகளுக்கு வழிகாட்டுகின்றன. மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வது, பொதுப் பொறியியல்தான். உள்கட்டமைப்பு ஒரு நாட்டின் வலிமையை அடுத்தவர்களுக்கு உணர்த்துவது என்பதால், அது வலிமையாகவும் புதியதாகவும் இருக்க வேண்டும். மக்கள் பெருக்கம் ஒரு சவாலாக இருந்து வருகிறது. மக்கள் பெருக்கத்திற்கு ஈடுகொடுக்கும் விதத்தில் அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பது அவசியம். அதற்கு பொறியியல் மட்டுமே உதவும்.

### பழமையான துறை!

பொதுப்பணித்துறை தமிழ்நாட்டின் பழமையான துறையாகும். இத்துறை 1858 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. 165 ஆண்டு பழமையானது. பொதுப்பணித்துறையில் இருந்து தான், பல்வேறு துறைகள் பிரிந்தன. 1905ல் இரயில்வே துறை, 1934ல் மின்சாரத் துறை, 1946ல் நெடுஞ்சாலைத் துறை, 1961ல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், 1970ல் குடிசை மாற்று வாரியம், 1971ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், 1978ல் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியம் மற்றும் 2021இல் நீர்வளத்துறை இப்படி பல துறைகள் பிரிக்கப்பட்டன.

கட்டடங்களாக தமிழ்நாட்டில் மூலதனச் சொத்துகளை உருவாக்குவதும், அவற்றைப் பராமரிப்பதும் இத்துறையின் முதன்மையான பணியாகும். சிறந்த நிர்வாகம் மற்றும் வெளிப்படைத் தன்மையை நிலைநாட்டிட மாநிலம் முழுவதும், இத்துறை கணினிமயமாக்கப்பட்டுள்ளது. கட்டுமானம் மற்றும் அதன் கருவிகள் தொடர்பான தொழில்நுட்ப முறைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்கிறது. இந்த ஆராய்ச்சிகள் வழியாக, வளங்களைப் பெருக்கிட முனைகிறது; பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேட்டினைக் கட்டுப்படுத்த வழிவகை செய்கிறது; பாரம்பரிய கட்டடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை மறுசீரமைப்பு செய்து, புதுப்பிக்கிறது; அரசின் முக்கிய நிகழ்ச்சிகள் மற்றும் மிக முக்கிய பிரமுகர்கள் வருகை தொடர்பான நிகழ்வுகளின்போது, கட்டுமானம் மற்றும் மின் பாதுகாப்புப் பணிகளையும் மேற்கொள்கிறது; மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக மாநிலத்தின் கட்டட உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம், நமது மாநிலத்தைத் தன்னிறைவு பெறச் செய்கிறது.

### நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுகின்றன!

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் உதவியுடன் தொடக்கம் முதல் இறுதி வரை, ஒப்படைக்கப்பட்ட பணிக்கான செயல்பாடுகள் அனைத்தும் கணினி மயமாக்கப்பட்டு வருகின்றன. அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரிகள், நீதிமன்றக் கட்டடங்கள், மாவட்ட ஆட்சியரகங்கள், பள்ளிகள், விடுதிக் கட்டடங்கள், பிற அரசுத் துறைகளுக்கான அலுவலகக் கட்டடங்கள் உள்ளிட்ட பல்வேறு அரசுக் கட்டடங்களின் கட்டுமானப் பணிகள், பொதுப்பணித்துறையின் மூலமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நவீன உலகில் எல்லாத் துறைகளிலும், புதிய கண்டுபிடிப்புகள், புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, முன்னேற்றப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அதனையொட்டி நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும் போது, கட்டுமானங்களின் செலவு பெரிதும் குறைகிறது; கட்டடங்களுக்குக் கம்பீரமான தோற்றம் கிடைக்கிறது. அது, பொது மக்களை ஈர்க்கக் கூடிய அளவில் அழகுடன் மிளிர்கிறது.

### கட்டுமானப் பணிகளில் தர மேலாண்மை;

இந்திய தரச் சான்று குறிப்புகள், கட்டுமான பொருட்கள் சோதனைக்கான ஆய்வகங்கள், (அனைத்து கட்டுமான தளங்களிலும் அடிப்படை பரிசோதனை கூடங்கள் அமைத்தல், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கின் நடுவே தூண்கள் - ஆர்க்கிடெக்ட் கட்டட வடிவமைப்பு ஆகியவை குறித்து கட்டட மலரில் இக்கட்டுரைகள் விளக்குகின்றன.

### கட்டடங்களில் அமைக்கப்படும் சுகாதார வசதி;

அடிப்படை வடிவமைப்புகள், நீர்க்கசிவு தடுக்கும் முறைகள், (பொது கட்டடங்களில் கழிவறை தண்ணீர் இணைப்புகள் நீர்க்கசிவு, எம்சான்ட் கலவை தயார் செய்யும் போது பாஸ்ராக் போன்ற கெமிக்கல் பயன்படுத்தி உறுதியான பூச்சு மேற்கொள்ளுதல், பாரம்பரிய கட்டடத்தின் முக்கியத்துவம், பாரம்பரிய கட்டடங்களை புதுப்பிக்கும் வழிமுறைகள் குறித்து இக்கட்டுரைகள் தெளிவாக்குகிறது.

மின் பாதுகாப்பு முறைகள், சோலார் மின் வசதி அமைக்கும் முறைகள் மற்றும் பயன்பாடு குறித்தும், மின்கசிவால் விபத்துக்கள் சேலம் அரசு மருத்துவமனை, திருவாரூர் அரசு மருத்துவமனை; சென்னை ஸ்டான்லி மருத்துவமனை மற்றும், செங்கல்பட்டு மருத்துவமனை லிப்ட் பழுது, இதுபோன்ற பழுதுகள் ஏற்படா வண்ணம் முன்னெச்சரிக்கைகள் குறித்தும் இந்த காலாண்டு இதழ் விவரிக்கிறது.

இந்த 'கட்டட மலர்' காலாண்டு இதழை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்றும் தெரிவித்தார்.

செய்யும் பணிகள் அனைத்தும் சிறப்பாக அமையட்டும்!

செம்மையாக செய்து முடித்து காட்டுவோம்!

காண்போர் அனைவரும் பாராட்டும் வண்ணம் செய்து முடிப்போம்!

உணர்வுடன், ஊக்கமுடன் செய்து காட்டுவோம்!

துறை புகழ் பெற அனைரும் ஒன்று படுவோம்!

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.என். பெரியண்ணன்

**டிசம்பர் 1 (2009)**



தருமபுரி ஒருங்கிணைந்த மாவட்டக் கழகச் செயலாளராகவும், பின்னர் தருமபுரி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

பென்னாகரம் ஒன்றிய கவுன்சிலர், பென்னாகரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் திறம்படச் செயலாற்றியவர்.

"அடக்கமும், அமைதியும் வாய்ந்தவர். எதற்கும் அதிர்ந்து பேசமாட்டார். கழகத் தோழர்களிடம் அன்பாகப் பழகி அனைவரையும் கட்டுக்கோப்பாக வைத்திருந்தவர்" என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் நிகழ்ச்சிகள்100 ஜீன் 2023 முதல் நவம்பர் 2023 வரை 60 நிகழ்ச்சிகள்நிறைவு டிசம்பர் 2023மாத நிகழ்வுகள் 10!



அமைச்சர் - மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

| வ.எண் | நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சி ஏற்பாடு | தலைமை | சிறப்பு அழைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. 05/12/23 06.00PM | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண்-32,32A பாலக்கரை பகுதி | ந.தனக்கோடி எஸ்.சுரேஷ் | ஓசூர்.அப்துல் ரஹ்மான் பாரி தலைமைக் கழக பேச்சாளர் |
| 2. 08/12/23 10.00AM | திருநங்கைகள் - மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் கலைஞர் உருவம் பொறித்த ஆடைகள் வழங்கும் நிகழ்வு மற்றும் கருத்தரங்கம் | மாவட்ட, மாநகர மகளிர் தொண்டர் அணி | கே.கயல்விழி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ரம்யா பேகம் மாநகர அமைப்பாளர் | நாமக்கல் ப.இராணி மாநில அணி செயலாளர் கருத்தரங்கத்தில் உரையாற்றுபவர் நடிகர் எம்.எஸ்.பாஸ்கர் |
| 3. 10/12/23 06.00PM | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண்-49,49A அரியமங்கலம் பகுதி | ஆ.ராஜேந்திரன் செபாஸ்டின் ஆரோக்கிய ராஜ் | சேப்பாக்கம் பிரபாகரன் தலைமைக் கழக பேச்சாளர் |
| 4. 11/12/23 06.00PM | தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக் கூட்டம் | துவாக்குடிநகரம் | இ.காயாம்பு நகர செயலாளர் | அனிதா ராதாகிருஷ்ணன் மாவட்டக் கழக செயலாளர் தூத்துக்குடி தெற்கு மாவட்டம் |
| 5. 15/12/23 06.00PM | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண்- 37,37A காட்டூர் பகுதி | ஆர்.விஸ்வநாதன் இரா.தவசீலன் | நந்தனம் நம்பிராஜன் தலைமைக் கழக பேச்சாளர் |
| 6. 22/12/23 06.00PM | தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம் | மலைக்கோட்டை பகுதி | மருந்துக்கடை ஆர்.மோகன் பகுதி செயலாளர் | பி.கே.சேகர் பாபு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் |
| 7. 23/12/23 10.00AM | தலைவர் கலைஞர் சிலை திறப்பு விழா திருச்சி கிழக்கு தொகுதி | திருச்சி தெற்கு மாவட்டக் கழகம் | மாவட்டக் கழக செயலாளர் | கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் |
| 8. 24/12/23 10.00AM | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் 9 ஊராட்சிகளிலும் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா கல்வெட்டு திறந்து கழக கொடியேற்றும் விழா | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | வி.ஏ.ராஜேந்திரன் ஒன்றிய செயலாளர் | மாவட்டக் கழக செயலாளர் மற்றும் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நூறாவது கொடிக்கம்பத்தை கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் விருதுநகர் தெற்கு மாவட்ட செயலாளர் அவர்கள் ஏற்றி வைப்பார் |
| 9. 27/12/23 06.00PM | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண்-45,45A பொன்மலை பகுதி | மு.முருகானந்தம் பி.தமிழ்மணி | ஈரோடு.இறைவன் தலைமைக் கழக பேச்சாளர் |
| 10. 30/12/23 05.00PM | தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் கருத்தரங்கம் | தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநில அணி செயலாளர்கள் | கே.என்.சேகரன் வண்ணை அரங்கநாதன் பி.எம்.சபியுல்லா என்.செந்தில் கவிஞர்.அ.சல்மா | தலைமை.நாஞ்சில் சம்பத் மதுக்கூர் ராமலிங்கம் கவிஞர்.சுகிர்தராணி |

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
செயலாளர்
- திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.


அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில்

# குழந்தைகளுக்கு தங்க மோதிரம்: அமைச்சர் கே.எஸ்.மஸ்தான் வழங்கல்!

திண்டிவனம், டிச. 1-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 46 ஆவது பிறந்தநாள் விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக விழுப்புரம் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் பிறந்த 11 குழந்தைகளுக்கு தங்க மோதிரம், அணிவிக்கும் நிகழ்ச்சியும் கர்ப்பிணிகள் மற்றும் உள்நோயாளிகளுக்கும் ஊட்டச்சத்துடன் கூடிய பெட்டகம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன் தலைமை தாங்கினார். மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர் முன்னிலை வகித்தார்.மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும் திண்டிவனம் நகராட்சி 28 வார்டு கவுன்சிலருமான சந்திரன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளில் அரசு மருத்துவமனையில் பிறந்த 11 குழந்தைகளுக்கு தங்க மோதிரம், அணிவித்து 4 லட்சம் ரூபாய் மதிப்பிலான ஊட்டச்சத்துடன் கூடிய பெட்டகத்தை வழங்கிமருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தமிழில் பெயர் சூட்ட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து கர்ப்பிணிகள், உள் நோயாளிகளுக்கு ஊட்டச்சத்துடன் கூடிய பெட்டகத்தையும் அவர் வழங்கினார்.

அப்போது வல்லம் ஒன்றியம் நீர் பெருத்தகரம் ஊராட்சியைச் சேர்ந்த ராதிகா - குகன்நாதன் தம்பதியினருக்கு அரசு மருத்துவமனையில் பிறந்த ஆண் குழந்தைக்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் மாமன்னன் உதயநிதி ஸ்டாலின் என பெயர் சூட்டி வாழ்த்து தெரிவித்தார்.

தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திண்டிவனத்தில் உள்ள செஞ்சி பேருந்து நிலையத்தில் 500க்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் பிரெட், பிஸ்கெட் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில்திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன்,அரசு வழக்கறிஞர் ஆதித்தன், வழக்கறிஞர் அசோகன், அரசு தலைமை மருத்துவர் டாக்டர் சாந்தகுமாரி, நகர துணை செயலாளர்கள் கௌதமன், ரேணுகா, மாவட்ட பிரதிநிதி சின்னத்துரை, நகரமன்ற உறுப்பினர்கள் ராஜசக்தி, ராம்குமார், பாஸ்கர், ஷேக் தில்ஷாத் பேகம்,மகளிர் அணி சிவகாமி, டேவிட், டாக்டர் அசோகன் பூதேரி பாஸ்கர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


## தி.மு.க. விவசாய அணி

# மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டம்!

விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தி.மு.க. விவசாய அணி மாவட்ட அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் இன்று (1.12.2023 - வெள்ளிக் கிழமை) பிற்பகல் 2.30 மணி அளவில், திருச்சி, கலைஞர் அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி தலைமையிலும் விவசாய அணி மாநில நிர்வாகிகள் முன்னிலையிலும் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்-அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திருச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ந.தியாகராஜன், எம்.எல்.ஏ., திருச்சி மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் க.வைரமணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட, மாநகர் அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: டிசம்பர் - 17 சேலத்தில் நடைபெற உள்ள தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாடு மற்றும் விவசாய அணியின் ஒன்றிய, நகர, பகுதிக் கழக மற்றும் பேரூர் புதிய நிர்வாகிகள் நியமனம் தொடர்பாக.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி.



தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை கட்டடம் (க & ப ) வட்டம் திருவாரூர்-1.**
**ஒப்பந்த வகை : ஒட்டு மொத்தம் / இனவிலைமுறை**

கலைஞர் 100 1924 - 2023

**மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 13 / க (க & ப) வட்டம் / திருவாரூர் / 2023-24 / நாள்: 28.11.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டடம் (க & ப ) வட்டம், திருவாரூர்-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து இரண்டு பணிகளுக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1) மயிலாடுதுறை மாவட்டத்தில் - 2 பணிகளுக்கான விபரம், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதர விபரங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.

| | | |
|---|---|---|
| 2 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் | 30.11.2023 முதல் 14.12.2023 பிற்பகல் 3.00 மணி வரை. |
| 3 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | 14.12.2023 பிற்பகல் 3.00 மணி வரை. |
| 4 | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 15.12.2023 பிற்பகல் 3.00 மணி முதல். |

**கண்காணிப்புப் பொறியாளர், பொபது கட்டட (க & ப) வட்டம், திருவாரூர்- 1.**

**செ.ம.தொ.இ / 6407 / ஒப்பந்தப்புள்ளி /2023**



தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை,**
திருவண்ணாமலை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.

கலைஞர் 100 1924 - 2023

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒ.அ.எண். 39/2023–24/ தவஅ/ நாள்: 27.11.2023.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, திருவண்ணாமலை வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி 2021–22 (சி.எம்.ஆர்.டி.பி நான்கு வழி சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்) (சாலை உபகரணங்கள் அமைத்தல் துணை பணி)** திருவண்ணாமலை (நெ), க(ம)ப, கோட்டத்திற்குட்பட்ட தண்டராம்பட்டு (நெ), க(ம)ப உட்கோட்டத்தைச் சார்ந்த ஒரு பணிக்கு **இரு உறைமுறையில் இணையவழி மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 18.12.2023** அன்று **12.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, இணைய வழி முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **01.12.2023** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**க(ம)ப, வட்டம், திருவண்ணாமலை**

செ.ம.தொ.இ./6415/ஒப்பந்தப்புள்ளி/2023



உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை முன்னிட்டு, திண்டுக்கல் பி.வி.கே.கிராண்ட் ஹோட்டலில் நேற்று முன்தினம் (29.11.2023) நடைபெற்ற மாவட்ட அளவிலான சிறப்பு நோக்கு கூட்டத்தில் முதலீட்டாளர்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை, வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி செ.ஜோதிமணி, வேடசந்துார் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் மு.பாஸ்கரன், திண்டுக்கல் மாநகராட்சி துணை மேயர் ச.ராஜப்பா, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் கா.பொன்ராஜ், மாவட்ட தொழில் மையம் பொது மேலாளர் பூ.சு.கமலக்கண்ணன் உட்பட பலர் உள்ளனர்.

### உலக முதலீட்டாளர்கள் மாநாடு மூலம்

# ரூ.60 ஆயிரம் கோடி தொழில் முதலீடு பெற இலக்கு!

## அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!



திண்டுக்கல், டிச. 1 -

உலக முதலீட்டாளர்கள் மாநாடு மூலம் ரூ.60 ஆயிரம் கோடி தொழில் முதலீடு பெற இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

**முதலீட்டாளர்கள் கூட்டம்!**

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் வகையில் தமிழ்நாடு அரசு வருகிற ஜனவரி மாதம் 7, 8ந் தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையில் நடத்த உள்ளது. இதையொட்டி திண்டுக்கல் மாவட்ட அளவிலான முதலீட்டாளர்கள் சிறப்பு கூட்டம் திண்டுக்கல்லில் நேற்று நடந்தது.

இந்த கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பூங்கொடி தலைமை தாங்கினார். உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு முதலீட்டாளர்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை வழங்கினார். பின்னர் அவர் பேசியதாவது:

**தமிழ்நாடு 3வது இடம்**

தொழில் துறையில் தமிழ் நாடு முதன்மை மாநிலமாக மாறவேண்டும் என்பதற்காக முதல்அமைச்சர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இதன் காரணமாக இந்தியாவில் தொழில் துறையில் 14 வது இடத்தில் இருந்த தமிழ்நாடு தற்போது 3வது இடத்துக்கு முன்னேறியுள்ளது. மேலும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் துபாய், அபு தாபி, ஜப்பான், சிங்கப்பூர் உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு சென்று அங்குள்ள தொழில் முதலீட்டாளர்களை சந்தித்து. தமிழகத்தில் தொழில் தொடங்க அழைப்பு விடுத்துள்ளார். இதன்பலனாகதான் சென்னையில் வருகிற 7. 8ந் தேதிகளில் உலக முத லீட்டாளர்கள் மாநாடு நடக்க உள்ளது. இந்த மாநாட்டின் மூலம் சிறு, குறு தொழில் முத டிலீடாக ரூ.60 ஆயிரம் கோடி வரை பெற இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**ரூ.141/4 கோடி மானியம்**

திண்டுக்கல் மாவட்டத்தில் 143 சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஊக்குவிப்பு மானியமாக ரூ.14 கோடியே 23 லட்சமும், மானியத்துடன் கூடிய சுய தொழில் கடனுதவி திட்டத்தில் 318 உற்பத்தி, சேவை மற்றும் வணிக நிறுவனங்களுக்கு தொழில் ஊக்குவிப்பு மானியமாக 7 கோடியே 19 லட்சமும் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 23 நிறுவனங்களிடம் ரூ.331 கோடியே 33 லட்சத்தில் தொழில் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய் யப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் பேசினார்.

இந்த கூட்டத்தில் எம்.பி.க்கள் வேலுச்சாமி, ஜோதிமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், வேடசந் தூர் எம்.எல்.ஏ.காந்திராஜன், திண்டுக்கல் மாநகர செயலாளர் துணை மேயர் ராஜப்பா, திண்டுக்கல்' மாநகராட்சி மேயர் இளமதி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பாஸ்கரன், துணை தலைவர் பொன்ராஜ், தொழில் முதலீட்டாளர்கள், தொழில் முனைவோர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்

### மதுரை வடக்கு, தெற்கு மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா வினாடி - வினா நிகழ்ச்சி!

## கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்பு!

### மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி - கோ.தளபதி எம்.எல்.ஏ. - சேடப்பட்டி மு.மணிமாறன் அறிக்கை!







மதுரை டிச. 1 -

மதுரை வடக்கு, தெற்கு மதுரை மாநகர் மாவட்ட திமுகவின் சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு வருகின்ற 2ம் தேதி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான வினாடி-வினா நிகழ்ச்சி கனிமொழி கருணாநிதி எம்.பி., தலைமையில் அமைச்சர் தங்கம் தென்னரசு முன்னிலையில் நடைபெற உள்ளதாக மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி-கோ.தளபதி எம்.எல்.ஏ., சேடப்பட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்கள், அதன் விபரம்.

உலகம் போற்றும் ஒப்பற்ற தலைவர் திருவள்ளுவருக்கு வானுயர சிலை அமைத்து உலகப் புகழ் பெற்ற மாபெரும் தமிழ் நாட்டின் சிற்பி கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாணவ மாணவியருக்கான வினாடி - வினா போட்டி நாளை (02.12.2023 - சனிக்கிழமை) காலை 10 மணியளவில் மதுரை பசுமலையில் உள்ள கோபால்சாமி திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மதுரை வடக்கு, தெற்கு மற்றும் மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெறும் இம்மாபெரும் நிகழ்ச்சிக்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமை வகிக்க உள்ளார்கள்.

நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் தங்கம் தென்னரசு முன்னிலை வகிக்க உள்ளார்கள்.

சிறப்புமிக்க இந்நிகழ்ச்சியில் மதுரை வடக்கு, மதுரை தெற்கு மற்றும் மதுரை மாநகர் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர், கழக முன்னோடிகள் என அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகர் மாவட்ட கழக செயலாளர்கள் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, கோ.தளபதி எம்.எல்.ஏ., சேடப்பட்டி மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

### தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு விழா வினாடி - வினா நிகழ்ச்சி!

### கனிமொழிகருணாநிதி எம்.பி. - அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்பு: அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!



தூத்துக்குடி, டிச. 1 -

முத்தமிழறிஞர், மூதறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாணவ - மாணவியர்கள் பங்கேற்கும் மாபெரும் வினாடி வினா நிகழ்ச்சி இன்று (01.12.2023 -வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணி அளவில் தூத்துக்குடி திருச்செந்தூர் சாலையில் உள்ள மாணிக்கம் மஹாலில் நடைபெற இருக்கிறது.

கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் தமிழக நிதி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சிறப்பு விருந் தினராக கலந்து கொள்கிறார்.

இவ்விழாவில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற் குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், வார்டு கழகச் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள், கழகத் தொண்டர்கள், மாணவ மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு இவ் வினாடி வினா நிகழ்ச்சியை சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் திருமதி. பி.கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.



கடலூர் மாவட்டம், சிதம்பரம் தனியார் திருமண மண்டபத்தில் நேற்று முன்தினம் (29.11.2023)ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் மற்றும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமை துறை சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசைகள் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச்செல்வன், சிதம்பரம் சார் ஆட்சியர் திருமதி சுவேதா சுமன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமியின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர்

# எம்.ரமேஷின் புதல்வர் எம்.ஆர்.தனேஷ்வரன் - சி.சுவாதி திருமணம்!

## மணவிழா வரவேற்பில் திருமதி சாந்தா ஸ்டாலின் கலந்துகொண்டு வாழ்த்தினார்!



**சென்னை, டிச.1-**

**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்துறை அமைச்சர் சு. முத்துசாமியின் சிறப்பு நேர்முக உதவியாளர் எம்.ரமேஷின் புதல்வர் திருமண விழா, இன்று சென்னையில் நடைபெறுகிறது.**

**அமைச்சர்கள், அதிகாரிகள், கழக முன்னணியினர் பலரும் இம்மணவிழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.**

இம்மணவிழா பற்றிய விவரம் வருமாறு:-

தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமியின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர் எம். ரமேஷ்-திருமதி ஏ.பி.உமா ஆகியோரின் புதல்வர் எம். ஆர்.தனேஷ்வரனுக் கும் - சென்னை ஏ.செழியன் திருமதி சி.கிருஷ்ண வேணி ஆகியோரின் புதல்வி சி.சுவாதிக்கும் திருமணம் இன்று (01.12.2023-வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணியளவில், சென்னை-கோபாலபுரம், அவ்வை சண்முகம் சாலையில் அமைந்துள்ள கீதாபவன் திருமண மண்டபத்தில் நடை பெறுகிறது.

இம்மணவிழாவில் - அமைச்சர்கள், அரசு உயர் அதிகாரிகள், கழக முன்னணியினர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

முன்னதாக-மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி, நேற்று (30.11.2023-வியாழக்கிழமை) மாலை சிறப்புற நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருமதி சாந்தா ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

மேலும் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோரும் கலந்து கொண்டு, மணமக்களை வாழ்த்தினார்கள்.

### சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை சார்பில்

# கடலூர் மாவட்டத்தில் சமுதாய வளைகாப்பு விழா!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில்!

கடலூர், டிச. 1-

கடலூர் மாவட்டம், சிதம்பரம் தனியார் திருமண மண்டபத்தில் 29.11.2023 அன்று ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் மற்றும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமை துறை சார்பில் சமுதாய வளைகாப்பு விழா வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ. அருண் தம்புராஜ், முன்னிலையில் 300 கர்ப்பிணி பெண்களுக்கு நடைபெற்றது.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது.

இன்றைய குழந்தைகள் தான் நாளைய சமுதாயம். ஒரு குழந்தையின் வளர்ச்சி அக்குழந்தை தாயின் கர்ப்பபையில் உருவான போதே ஆரம்பமாகி விடுகிறது. குழந்தையின் வளர்ச்சி அதன் வாழ்வில் முதல் வருடத்தில் அதிக அளவில் நடைபெறுகிறது. இரண்டு வயதை அடைவதற்க்கு முன் ஒரு குழந்தைக்கு ஏற்படும் ஆரோக்கியம் மற்றும் வளர்ச்சி குறைபாட்டை திரும்ப சரி செய்வது என்பது கடினமாகும். எனவே, ஒரு குழந்தை ஆரோக்கிமான அறிவுதிறன் நிறைந்த குழந்தையாக உருவாக, அந்த கர்ப்பிணி தாய்க்கு கர்ப்பமான நாளிலிருந்து சிறப்பு கவனம் அளிக்க வேண்டும்.

குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டுடன் இருப்பது அல்லது வயதிற்கேற்ற எடை மற்றும் உயரத்துடன் வளர்ச்சி இல்லாமல் இருப்பது போன்றவற்றை நாம் கவனிக்காமல் விட்டால் எதிர்காலத்தில் அவர்கள் ஆரோக்கிய குறைபாட்டுடன், வேலை செய்யும் திறன் குறைந்தவர்காளாக இருப்பார்கள். இதனை கருத்தில் கொண்டு அரசு பல்வேறு நலத்திட்டங்களை கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கி வருகிறது.

சமுதாய வளையகாப்பு நிகழ்ச்சியின் மூலம் ஒவ்வொரு கர்ப்பிணி தாயும் ஆரோக்கியமான குழந்தையை ஈன்றெடுக்க கர்ப்ப காலத்தில் கடைபிடிக்க வேண்டிய சுகாதார முறை, ஊட்டச்சத்து உணவு முறை, மருத்துவ பரிசோதனைகளின் அவசியத்தை தெரிந்துகொள்ள வழி வகை செய்யப்பட்டுள்ளது. ஏழை எளிய பெண்கள் தங்களுக்கு வளைகாப்பு நடத்துவதற்கான வசதிகள் இல்லாத நிலையில் கவலை கொள்ளக் கூடாது என்ற அடிப்படையில் தமிழக அரசு தாயுள்ளத்தோடு ஒவ்வொரு ஆண்டும் வளைகாப்பு விழா நடத்துகிறது. இந்த ஆண்டு கடலூர் மாவட்டத்தில் அனைத்து 14 வட்டாரங்களிலும் உள்ள 1400 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைக்காப்பு நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் முதல் நிகழ்வாக கீரப்பாளையம், குமராட்சி மற்றும் பரங்கிப்பேட்டை ஆகிய 3 வட்டாரங்களை சார்ந்த 300 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளில் கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசையாக மஞ்சள், குங்குமம், சந்தனம், சேலை, வளையல், பிளவுஸ்பிட், வாழைப்பழம், வெற்றிலைப்பாக்கு, கர்ப்ப கால பராமரிப்பு புத்தகம், மற்றும் எவர்சில்வர் தட்டு என பல்வேறு பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கர்ப்பிணி பெண்களுக்கு ஏழாவது மற்றும் ஒன்பதாவது மாதகாலத்தில் இந்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது, இந்நிகழ்வு தாய்மை அடையும் பெண்ணுக்கு அளவற்ற மகிழ்ச்சியை கொடுக்கிறது. பெண்மைக்கு எத்தனை சிறப்புகள் இருந்தாலும், அதில் அனைத்திலும் உச்சமாக இருப்பது தாய்மை. தாய்மை என்பது ஒவ்வொரு பெண்ணின் வாழ்விலும் ஒரு முக்கியமான நிகழ்வு. தாய்மை ஒரு புனிதமான இயற்கையான நிகழ்வு.

கர்ப்பம் என தெரிந்தவுடன் அங்கன்வாடி மையத்தில் பதிவு செய்த நாளிலிருந்து ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 150 கிராம் வீதம் ஒரு மாதத்திற்கு 25 நாட்களுக்கு 3.750 கிலோ கிராம் அனைத்து ஊட்டச்சத்துக்களும் அடங்கிய சத்தான இணை உணவு வாரந்தோறும் வழங்கப்படுகிறது.

கர்ப்பிணி பெண்களுக்கு கர்ப்பகாலத்தில் சத்தான உணவு உண்பதற்காகவும், கர்ப்பநிலையிலும் வேலைக்குச் சென்று குடும்பத்திற்காக பெறப்படும் ஊதியத்தினை ஈடுசெய்யவும், கர்ப்பிணி வேலைக்குச் செல்லாமல் போதிய ஓய்வு எடுத்துக்கொண்டு ஆரோக்கியமான குழந்தையை அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்க டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தில் ரூ.18,000/ வழங்கப்படுகிறது. திட்டத்தின் மூலம் அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரச விக்கும் கர்ப்பிணிகளுக்கு ரூ.700/ வழங்கப்படுகிறது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர்ம.சிந்தனைச்செல்வன் , சிதம்பரம் சார் ஆட்சியர் திருமதி சுவேதா சுமன், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.ஹிரியன் ரவிக்குமார் , மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்ட அலுவலர் த.பழனி, மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.கோமதி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணிச் செயலாளர் – இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளான நவம்பர்27 அன்று ஆலங்குடி அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் தங்க மோதிரம் அணிவித்தார். இந்நிகழ்வில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் டி.தங்கமணி, அரு. வடிவேல், கே.எஸ்.ரவி திருவரங்குளம் ஒன்றிய பெருந்தலைவர் வள்ளியம்மை தங்கமணி, ஆலங்குடி பேரூர் கழகச் செயலாளர் ஆ.பழனிக்குமார், ஆலங்குடி பேரூராட்சி மன்றத் தலைவர் எம்.ராசி முருகானந்தம், தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ரபீக், ஆசைத்தம்பி மற்றும் மாவட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.





கேரள மாநிலம் கண்ணூரில் பல்கலைக்கழக மாணவர்களின் ஒருங்கிணைப்பில் கடந்த 2 நாட்களாக நடைபெற்ற 'கண்ணூர் பல்கலைக்கழக இலக்கியத் திருவிழா 2023'ன் நிறைவு விழாவில் தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று 'எழுதியும் பேசியும் வளர்ந்த இயக்கம்' என்ற புகழுடைய திராவிட இயக்கமும் அதன் தலைவர்களும், இலக்கியத்தை அனைத்து மக்களுக்குமானதாக பரவலாக்கியது குறித்து விரிவாகப் பேசினார். மேலும், 'மாநில மொழிகளை நம் இலக்கிய வளத்தை, கல்வி உரிமை உள்ளிட்ட மாநில உரிமைகளை பாதுகாக்க தமிழ்நாடும் கேரளமும் இணைந்து பாடுபடுவோம்' எனவும் உரையாற்றினார்.

### மக்கள் வரிப்பணத்தை வீணடித்த அ.தி.மு.க. மீது பா.ஜ.க. அரசு ஏன் வழக்குப் போடவில்லை?

# தமிழ்நாடு அரசு மீது களங்கம் கற்பிக்கவே அமலாக்கத் துறையை பா.ஜ.க. பயன்படுத்துகிறது!

## "நியூஸ் 18" தொலைக்காட்சியில் 'சொல்லதிகாரம்' விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் கார்த்திகேயன் குற்றச்சாட்டு!

சென்னை, டிச.1-

**"மக்கள் வரிப்பணத்தை வீணடித்த அ.தி.மு.க. மீது பா.ஜ.க. அரசு ஏன் வழக்குப் போடவில்லை" என்றும் "தமிழ்நாடு அரசு மீது களங்கம் கற்பிக்கவே அமலாக்கத்துறையை பா.ஜ.க. பயன்படுத்துகிறது" என்றும் "நியூஸ்18" தொலைக்காட்சியில் சொல்லதிகாரம் விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் கார்த்திகேயன் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

"நியூஸ் 18 தொலைக்காட்சி"யில் 'தமிழ்நாடு அரசின் மீது களங்கம் கற்பிக்கவே அமலாக்கத்துறையை பா.ஜ.க. பயன்படுத்துகிறது என்ற தி.மு.க.வின் குற்றச்சாட்டு ஆதாரமா? அரசியலா?' என்ற தலைப்பில் நெறியாளர் கார்த்திகைச்செல்வன் நடத்திய 'சொல்லதிகாரம்' விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் கார்த்திகேயனின் விவாதம் வருமாறு :

**நெறியாளர் கார்த்திகைச்செல்வன்:** நீதித்துறை என்கிற போது ஒரு கிளியாரிட்டி தேவைப்படுகிறது. இரண்டு பேருமே கிளைம் செய்றாங்க. அதனைத் தாண்டி இதில் வேறு என்ன சிக்கலைப் பார்க்க வேண்டி இருக்கு? மக்களைப் பொறுத்தவரையில் என்ன கேள்வி இருக்கிறது என்றால் பொதுவாகவே தமிழ்நாட்டில் அல்லது இந்திய முழுவதும் கனிம வளங்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்கான நிறைய போராட்டங்களை எல்லாம் நடத்திக்கிட்டுத் தான் இருக்கிறார்கள். இதனை எப்படிப் பார்க்கிறீங்க.?

**மூத்த பத்திரிகையாளர் கார்த்திகேயன்:** முதலில் மணல் கொள்ளை நடந்ததா இல்லையா விசாரணைக்குப் பிறகு தான் வரும். அதற்குள் நாம் செல்லவிரும்ப வில்லை. இதில் யாருக்கும் நான் கிளீன் ஷீட் கொடுக்க விரும்பவில்லை. தவறு நடந்தது என்றும் சொல்ல வில்லை. இதில் அடிப்படையில் நாம் பார்க்க வேண்டிய விஷயம். ஒரு வழக்குப் பதிவு செய்யும் போது அதற்கான நடைமுறைகள் இருக்கிறது. அதனைத் தான் நீதிமன்றம் கேட்டிருக்கிறது.

இன்றைக்கு பல கிரிமினல் வழக்குகள் இப்படித் தான் கிராஸ் ஆகிறது. இன்றைக்கு இவர்கள். 4730 கோடி ரூபாய் அளவுக்கு மணல் எடுக்கப்பட்டு, நஷ்டம் ஏற்பட்டு இருக்கு என்று சொல்கிறார்கள். பா.ஜ.க. வின் தலைவர் ஆந்திராவில் இருக்கக் கூடியவர் ரகுபதி பட் டேஸ்வரி. அவர் இந்த மாதத்தின் ஆரம்பத்தில் வெளிப் படையாக பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தி ஒரு குற்றச்சாட்டை வைத்தார்.

ரூபாய் 2000 கோடிக்கு மணல் கொள்ளை நடந் திருக்கிறது. அங்கே ஜே.பி. இன்டஸ்ட்ரீஸ் என்று ஜெய பிரகாஷ் இன்டஸ்ட்ரீஸ் என்கிற ஒரு நிறுவனத்துடன் ஒப்பந்தம் போட்டு மாதம் 188 கோடி ரூபாய். அதில் 120 கோடி ரூபாய் ஆந்திர முதலமைச்சர் ஜெகனுக்கு மட்டும் போய்ச் சேருகிறது என்று சொல்லி, அவர் ஒரு குற்றச் சாட்டை வைக்கிறார்.

இதற்கு முன்பு ஏற்கனவே ஈ.டி. இவர்கள் மீது சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்று சொல்லி அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற காங்கிரஸ் கட்சி கேட்கிறது. பா.ஜ.க.வும் கேட்கிறது. தெலுங்குதேசமும் கேட்கிறது. இது வரை எந்த ஈ.டி.யும் அங்கே போகவில்லை. அந்த வழக்கு சம்பந்தமாக அங்கே எப்.ஐ.ஆர். கூட இருக்கிறது. ஏன் இது வரைக்கும் எந்த ஈ.டி.யும் அங்கே போகவில்லை? எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை? அடிப்படையான கேள்வி அதுதான். இங்கே பேசியவர்கள் 'தவறு நடந்து விட்டால் வரக்கூடாதா?' என்று கேட்டார்கள். இதற்கான பதிலை நேற்று உச்சநீதிமன்றத்தில் நீதியரசர் எஸ்.கே. கௌல் தலைமை தாங்கக் கூடிய அந்த பெஞ்ச் முக்கியமான தீர்ப்பு வழங்கியுள்ளது.

2022 இல் டி.எம்.எல்.ஏ.வில் கொண்டு வந்த சட்டத்திருத்தங்களை உச்சநீதிமன்றம் ஒப்புக் கொண்டது. அதனை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்ற பெட்டிஷன் வந்தபோது முடியவே முடியாது என்று உச்சநீதிமன்றத்தில் வாதிட்டது ஒன்றிய அரசு.

"இல்லை, மறு ஆய்வு செய்ய முடியாது என்று சொல்வதற்கு நீங்கள் யார்? நாங்கள் மறு ஆய்வு செய்வோம்" என்று ஏற்றுக்கொண்டு அதனை விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வழக்கில் தெளிவாக நேற்று நீதியரசர் சஞ்சய் கண்ணா கூறுகிறார். "ஒரு குற்றம் நடக்காமல் நீங்கள் வெறும் 120-Bயில் மட்டும் வைத்துக் கொண்டு எங்களிடம் வந்து, நாங்கள் பி.எம்.எல்.ஏ.வை இன்வலப் செய்வோம் என்று உங்களால் சொல்லமுடியுமா?, முடியாது, உங்களுக்கு அந்த அதிகாரம் கிடையாது. பி.எம்.எல். ஏ.வராது" என்று சொல்றாங்க. செக்சன் திரி ஆப் பி.எம்.எல்.ஏ. வில் அப்பன்ஸை ட்ரை செய்ய முடியும்.

நீங்கள் ஒரு வழக்கைப் போட்டுவிட்டு வந்து, சதித் திட்டம் தீட்டப்பட்டு இருக்கு 120-பியில் அதனை வைத்துக் கொண்டு நாங்கள் பி.எம்.எல். கொண்டு வறேன், ஈ.டி. கைது செய்யும் எனச் சொல்லி, இந்த வழக்கு போட முடியாது" என்று சொன்னார்கள்.

இதையே தான் முன்பு பங்கல்ஜன், பஞ்சால் என்பவர்களுடைய வழக்கிலேயும் கைது செய்ததையே ரத்து செய்தார்கள். இப்போது தான் சில மாதங்களுக்கு முன்பு நடந்தது. உச்சநீதிமன்றம் சொல்கிறது. உங்களுக்கு கொடுத்து இருக்கிற அதிகாரம், இந்தியாவில் இருக்கக் கூடிய அதி முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விசாரனை அமைப்பு. அதற்காக இதனைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்று சொல்லி, கைது செய்யப்பட்டதையே ரத்து செய்து அவர்களை விடுதலை செய்தது. எம்.த்ரீ.எம். என்ற ஒரு நிறுவனம்; அவர்களிடம் அரசு சேலஞ்ச் செய்தது அந்த வழக்கில். அதிலேயும் தெளிவாகச் சொன்னார்கள், "நடைமுறைகள் வேண்டும். உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதற்காக, உங்கள் இஷ்டத்துக்கு ஒருவரை கைது செய்ய முடியாது. அதே போல காரணம் சொல்ல முடியாது". அந்த வழக்கில் முக்கியமாக சொன்ன ஒரு விஷயம் 'ஒரு வரை பி.எம்.எல்.வில் ஈ.டி. கைது செய்யும் போது வாய்மொழியில் எதற்காக கைது செய்கிறோம் என்று சொன்னால் போதும். எழுத்து மூலமாக கொடுக்கவே வேண்டாம்' என்று ஈடி. சொன்னது; ஒன்றிய அரசும் சொன்னது.

உச்சநீதிமன்றம், "அதனையெல்லாம் ஏற்றுக் கொள்ள முடியாது" என்று தெளிவாகவே கூறிவிட்டது. நீங்கள் எழுத்துப்பூர்வமாக ஒவ்வொருவருக்கும் 'என்ன காரணத்திற்காக கைது செய்யப்படுகிறார்கள்' என்று கொடுக்க வேண்டும். இதுவரைக்கும் ஒரு வழக்கிலாவது இப்படி ஈ.டி. கொடுத்து இருக்கிறதா?



பத்திரிகையாளர் கார்த்திகேயன்

நெறியாளர் கார்த்திகைச்செல்வன்

அதனுடைய நீட்சி தான் இப்போது எங்கே வந்து நிற்கிறது என்றால் ஜூரிஸ்டிக்சனே இல்லாமல் ஏதோ ஒரு வழக்கு இருக்கிறது என்றால் அதனை நாங்கள் விசாரிக்கிறோம் என்று வருகிறார்கள்.

**நெறியாளர்:** அதனால் தான் ஆச்சார்யா என்ன சொல்கிறார்? ஒரு விசாரணைக்குப் போகிறார்கள். பல்வேறு தகவல்கள் வருகிறது என்றால் அதனுடைய தொடர்ச்சியாக அந்த வழக்கில் போகத்தானே செய்யும். அதனை நீங்கள் எப்படி தடுப்பது? ஒரு வேளை ஆதாரங்கள் இல்லாமல் போகப்போகிறார்களா? ஆதாரங்களைக் கொடுக்க வேண்டிய கடமை அவர்களுக்கு இருக்கிறதில்லையா?

**கார்த்திகேயன்:** இந்தக் கேள்விக்கு இந்த வருடம் ஜனவரியில் டெல்லி உயர்நீதிமன்றத்தில் நீதியரசர் எஸ்வன் சர்மா தலைமையில் உள்ள ஒரு அமர்வு இருக்கிறது. அவர் தெள்ளத் தெளிவாக ஒரு தீர்ப்பே வழங்கி இருக்கிறார். அவர் என்ன சொல்கிறார்; "நீங்கள் போய் விசாரித்துவிட்டு அனுமானத்தின் அடிப்படையில் ஒரு தவறு நடந்து இருக்கும் என்று உங்களிடம் இருக்கின்ற எவிடென்சை வைத்துக் கொண்டு போய் பி.எம்.எல்.ஏ.வை இன்வெலப் செய்கிறேன் என்று சொல்லிட்டு, அதற்குப் பிறகு எனக்குத் தரவுகள் இதில் கிடைக்கும். இதில் பி.எம்.எல்.ஏ. வில் ஈ.டி.க்கு உட்பட்டது தான் என்று சொல்லி அனுமானத்தில் எல்லாம் செய்ய முடியாது. உங்களிடம் இருக்கின்ற மெட்டீரியல் தரவுகள் இருக்கக் கூடியவைகளை ஜஸ்டிஃபை செய்ய வேண்டும். நான் விசாரிக்கிறேன். அதற்கு பிறகு மேல் விசாரணையை எல்லாம் செய்ய முடியாது" என்பதை டெல்லி உயர்நீதிமன்றம் மிகவும் தெளிவாக அந்த வழக்கில் சொல்லி இருக்கிறது.

ஜூரிஸ்டிக்சனில் தெளிவாக இருக்கிறது. இதனை ஒருமாநில அரசு தான் விசாரிக்க வேண்டும். ஒரு எப்.ஐ.ஆர்.போட்டு, கரப்சன் ஆக்ட்டிலோ இல்லை என்றால் வேறு ஏதேனும் ஒரு கிரைமிலோ இதனை விசாரிக்கலாம். பி.எம்.எல்.ஏ. எதில் வருகிறது? அதில் இருந்து ஒரு பண பரிமாற்றம் நடந்தால் மட்டும் தானே விசாரிக்க வரவேண்டும். இதில் என்ன நடந்தது என்றே தெரியாது. ஆனால் இதில் நேரடியாக "ஐந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சம்மன் அனுப்புவேன், நீங்கள் வந்து நிற்க வேண்டும்" என்று சொன்னால், அதனையும் அவர்கள் என்னென்ன கேட்கிறார்கள் என்றால் "அங்கே என்னென்ன குவாரி இருக்கு? ஜி.பி.எஸ், டேங்கி, ஜியோ டேங்கியோடு கொடுங்கள் என்று கேட்கிறார்கள். எத்தனை விற்றிருக்கிறீர்கள் என்று சொல்லிக் கேட்கிறார்கள். இதனையெல்லாம் கேட்பதற்கு எதாவது ஆர்டர் இருக்கிறதா.? இதில் என்ன தவறு நடந்து இருக்கிறது என்று உறுதிப்படுத்த முடியுமா? அதனால் தான் கோர்ட் இதில் ஸ்டே கொடுத்து இருக்கிறது. அவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அவர்கள் நேரடியாக வந்து, அவர்கள் நினைத்த மாதிரி எல்லாம் கேட்க முடியாது என்று சொல்கிறது. அந்த நான்கு எப்.ஐ.ஆரிலும்,

**நெறியாளர்:** இந்தியா முழுவதும் நடக்கிறது. தமிழ்நாட்டில் நடந்த ஒரு வரலாற்றை சொல்கிறேன். மணிக்குமார் என்ற நீதிபதி எல்லா கல்குவாரிகளையும் மூடச் சொல்கிறார். அங்கே இருந்தே இந்தப் பிரச்சினைகள் இருக்கிறது இல்லையா, இதனை நாம் அப்படியே கடந்து போவதும் சரியாக இருக்க முடியுமா?

**கார்த்திகேயன்:** அதனால்தான் ஆரம்பத்திலே நான் ஒரு கேவியட் பைல் செய்தேன். இதில் தவறு நடந்ததா, நடக்கவில்லையா என்பதற்குள் எல்லாம் நான் போகவே விரும்பவில்லை. யாரையும் கிளீன் ஷீட் கொடுக்க முடியாது. யாரையும் குற்றம் சாட்டவும் நான் தயாராக இல்லை. இவை விசாரிக்கப்படவேண்டும். நான் என்ன கேட்கிறேன். உண்மையிலேயே நீங்கள் இவ்வளவு பேசுகிறீர்கள் இல்லையா? உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுங்கள், சி.பி.ஐ. விசாரணை கேளுங்கள். இதே விசாரணையைத் தானே அண்டை மாநிலமான ஆந்திராவில் சி.பி.ஐ. விசாரணை கேட்கிறீர்கள் இல்லையா, இங்கே வழக்குத் தொடுங்கள். சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என்று. இதே மாதிரி பல்வேறு வழக்குகள் நடந்திருக்கின்றன. இங்கே அதே ஆட்சி நடைபெறுகிறது. அதனால் விசாரணையில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்லி சி.பி.ஐ.விசாரணை கேட்கலாமே. இங்கே ஏன் அதனைச் செய்ய மறுக்கிறீர்கள்?

**நெறியாளர்:** உங்களின் நிறைவுக் கருத்தைக் கூறுங்கள்.

**கார்த்திகேயன்:** ஆட்சி மாற்றம் வந்த உடனேயே என்ன மாற்றம் வருகிறது என்பதற்கு ஒரு உதாரணம் மட்டும் சொல்கிறேன். போன வாரம் விவேக் வெங்கடசாமி என்ற தெலுங்கானாவில் இருக்கின்ற ஒரு எம்.எல்.ஏ., காங்கிரஸ் வேட்பாளர். அங்கே நிற்கக் கூடியவர்களிலே பெரும் பணக்காரர் அவர்தான். அவர் டிக்ளேர் செய்தது மட்டும் 600 கோடி ரூபாய் சொத்து. கரெக்டா எலக்சன் வரும் போது அவருக்கு எதிரா ரெய்டு எல்லாம் நடந்தது. ஈடி. எல்லாம் வந்தது.

அவர் இந்த மாத ஆரம்பத்தில் அதாவது நவம்பர் மாதம் முதல் வாரம் வரை அவர் பி.ஜே.பி.யில் இருந்தார். இதே பணக்காரர் தான், 100 கோடி ரூபாய் பணப் பரிவர்த்தனை என்று அவர் மீது புகார் எல்லாம் இருந்தது. அப்போது ஈ.டி. வரவில்லை. அவர் காங்கிரசுக்கு மாறினார். பா.ஜ.க.வில் கமிட்டியில் சேர்மனாகவே இருந்தார். ஆனால் காங்கிரஸில் மாறி இங்கே வேட்பாளராக அறிவிக்கப்பட்ட உடனே ஈ.டி. வந்தது. அவர் மீது வழக்கும் வந்தது. இதனை வைத்து நாம் என்ன புரிந்து கொள்வது? அப்போ, தேர்தல் நடக்கும் போது அவர் மீது ஈடி சம்மன் எதற்காக வருகிறது? சம்மன் செய்யுங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. தேர்தல் நடக்கின்ற அன்றைக்கு முதலமைச்சருடைய மகனுக்கு எதற்காக வருகிறது? இப்போது இங்கே பேசியவர் கேட்கிறார் இல்லையா, சம்மன் அனுப்பலைன்னா அடுத்தது அரெஸ்ட் என்று. அதற்காகத்தான் இந்த வழக்கில் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள்.

mere non cooperation of witness in response to the summon issued under section 50 under act 202, could not be enough to render him/her, liabel to be arrested under section 19.(சட்டம் 202 இன் கீழ் சட்டப்பிரிவு 50ன் கீழ் வழங்கப்பட்ட சம்மனுக்குப் பதிலளிக்கும் வகையில் சாட்சியின் ஒத்துழையாமை, அவரை / அவளை, பிரிவு 19ன் கீழ் கைது செய்யப்'போதுமானதாக இருக்க முடியாது.)

இதை சொல்லிட்டு அந்த பங்கஜன் பஜன் கேஸில் உச்சநீதிமன்றம் சொன்னது, "நீங்கள் ஒருவரை விசாரணைக்கு கூப்பிடுகிறீர்கள். ஒப்புதல் வாக்கு மூலம் கொடுக்கச் சொல்லி கேட்கிறீர்கள். அவர் கொடுக்கவில்லை என்றால் யார் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறீங்க? கொடுக்கவில்லை என்றால் அவர் குற்றவாளி என்று முடிவு செய்துவிடுவீங்களா? ஒத்துழைப்பு தரவில்லை என்றாலே அவர் குற்றவாளி ஆகிவிடுவாரா?" என்று உச்சநீதிமன்றம் கேட்டிருக்கிறது. இதில் முக்கியமான விஷயம், ஈ.டி. சம்மன் அனுப்பும் போது, நீங்கள் ஒரு அக்யூஸ்டைக் கூப்பிடுங்கள், விட்னஸைக் கூப்பிடுங்கள் என்று சொல்லாது. இரண்டாவது இங்கே பேசிய நண்பர் சொன்னதில் ஒரே ஒரு திருத்தம்; ஒப்புதல் வாக்குமூலம் வாங்கிட்டால் இவரை கஸ்டடியில் வைத்துவிட்டு, குற்றவாளி என்று சொல்லப்படுகிறவர்தான், தான் நிரபராதி என்று நிரூபிக்க வேண்டும்.

இங்கே ஒரு ஒரு விஷயத்தை மட்டும் நான் கேட்கிறேன். ஆயூஸ்மான் பாரத் பற்றி எல்லாரும் சொன்னார்கள். ஆயூஸ்மான் பாரத்தில் பிரதமரின் காப்பீடு திட்டத்தில், செத்துப்போனவர்களுக்கு சிகிச்சை அளித்ததாக அரசாங்கமே பணம் கொடுத்தார்கள்.

4761 பேர். வெறும் ஏழு ஆதார் கார்டை வைத்து ரிஜிஸ்ட்டர் ஆகி இருக்காங்க. நடந்தது 2017, 18, 19, 20, 21வரைக்கும், அதுவும் தமிழ்நாட்டில் தான் அதிகமாக நடந்திருக்கு. அப்போது இருந்த முதலமைச்சர் யார், சுகாதாரத்துறை அமைச்சர் யார் தமிழ்நாட்டில்? அவர்களுக்கு ஈடி வந்திருக்கா.? மக்கள் வரிப் பணம் வீணாபோய் இருக்கு. ஏமாற்றம் நடந்திருக்கு. அப்போ அ.தி.மு.க. மீது பா.ஜ.க. அரசு ஏன் இது வரைக்கும் வழக்கு போடவில்லை? நான் கேட்பது அதில் முகாந்தரம் இருக்கிறது என்று ஒரு விசாரணை யாவது நடந்திருக்கா? இவர்கள் செலக்டிவாக ஈ.டியைப் பயன்படுத்துகிறார்கள் என்றுதானே தெரிகிறது.

இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் கார்த்திகேயன் பேட்டியளித்தார்.





கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நேற்று முன்தினம் (28.11.2023) சென்னை, கீழ்ப்பாக்கம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில், மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் டாக்டர். கே.கோபால். கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர்.ந.சுப்பையன். சிறப்புபணி அலுவலர் (தமிழ்நாடு கூட்டுறவு வங்கி) எம்.பி.சிவன்அருள்.,(ஓய்வு) ஆகியோர் உள்ளனர்.

## தி.மு.க. தொண்டர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் அறிவிப்பு

தி.மு.க. தொண்டர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (2.12.2023 - சனிக்கிழமை), காலை 11.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் தி.மு.க. தொண்டர் அணி மாநில நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு மற்றும்

தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாடு.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை18.
நாள் : 25.11.2023,

**மாஸ்டர் பெ. சேகர்**
செயலாளர், தி.மு.க. தொண்டர் அணி

## எண்ணூர் - கத்திவாக்கத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு இனிப்பு!

சென்னை, டிச.1-

கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மாநில மீனவர் அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் வழிகாட்டுதலோடு எண்ணூர் - கத்திவாக்கம் 2வது வட்டத்தில் அமைந்துள்ள அரசு ஆரம்பப் பள்ளியில் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சியை மாவட்ட வர்த்தக அணி துணைத் தலைவர் பிரட் சுரேஷ் ஏற்பாட்டில் 2வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி சந்தோஷ்குமார் இனிப்பு வழங்கினார்.

இதில் திருவொற்றியூர் மேற்கு பகுதி முன்னாள் துணை செயலாளர் இ.ரமேஷ், முன்னாள் நகரச் செயலாளர் அ.பாண்டியன், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் டி.தேசப்பன், 2வது வட்ட பகுதிப் பிரதிநிதி பி.ரமேஷ், முன்னாள் நகரச் செயலாளர் எம்.மகேந்திரன், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் பி.பட்டறையன், கழக உடன் பிறப்புகள் ஆர்.எஸ்.ரோடு முருகன், ஆர்.சுரேஷ், ராஜேஷ், மாரியப்பன், கார்த்திக், சுரேஷ், விக்கி, தயாளன் உட்பட பலர் கலந்து கொண்டு பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நோட்டு, புத்தகம், பேனா, இனிப்பு வழங்கி சிறப்பாக கொண்டாடப் பட்டது.





தருமபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலம் மாவட்டக் கழக அலுவலகத்தில்,சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி மாநாடு,2024 நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து கழக செயற்குழு கூட்டம் தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது.கூட்டத்தில் அவைத்தலைவர் கே.மனோகரன்,மாவட்ட பொருளாளர் எம்.எம்.முருகன்,மாவட்ட துணை செயலாளர்கள் வழக்கறிஞர்.ஆ.மணி,கிருஷ்ணகுமார் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய,பேரூர் கழக செயலாளர்கள்,மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## முதலமைச்சரிடம் ஆலோசித்து - விரைவில்

# கூட்டுறவு வங்கிகள் மூலம் கல்விக் கடன்!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தகவல்!



சென்னை, டிச.1-

சென்னை, கீழ்ப்பாக்கம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில் நேற்று முன் தினம் (28.11.2023) கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்தாவது : -

கூட்டுறவுத்துறையின் சார்பில் இன்றைய தினம் மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர்கள் ஆய்வுக்கூட்டம் நடைபெற்று வருகிறது. கூட்டுறவுத்துறையின் மூலம் இத்தகைய ஆய்வுக் கூட்டங்கள் செயலாளர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மற்றும் துறை அமைச்சர் என்ற முறையில் என் மூலமாகவும் அடிக்கடி நடத்தப்பட்டு வருகிறது. அந்த ஆய்வுகள் அடிப்படையில் பார்த்தால் கூட்டுறவுத்துறையின் வளர்ச்சி எதிர் பார்த்ததைவிட கூடுதலான பணி முன்னேற்றத்தை காண முடிகிறது.

### முதலமைச்சர் வழிகாட்டுதல்!

இதற்கெல்லாம் காரணம் என்னவென்றால் அனைத்துத் துறைகளும் சிறப்பாக முன்னேற்றம் அடையவேண்டும். அனைத்துத் துறைகளின் ஒட்டு மொத்த முன்னேற்றத்தின் அடிப்படையில் நம்முடைய மாநிலம் முன்னோடி மாநிலமாக வரவேண்டும் என்று

“இந்தியாவின் முதன்மையான முதலமைச்சர் என்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் அழைக்கப்படுவதை விட, பெருமைப்படுத்தப்படுவதை விட தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக முன்னேறி இருக்கின்றது என்ற செய்தி வர வேண்டும் என்று அதற்காக நான் உழைக்கின்றேன்” என்று முதலமைச்சர் குறிப்பிட்டுச் சொன்னதைப் போல, அனைத்துத் துறை வளர்ச்சியிலும் எங்களுக்கு வழிக்காட்டுதல்களைத் தந்து முதலமைச்சர் கவனம் செலுத்தி வருகிறார்கள். அதன் அடிப்படையிலே கூட்டுறவுத்துறையினை செயல்படுத்தி வருகிறோம்.

கூட்டுறவுத்துறையைப் பொறுத்த வரையில் ஏராளமான மக்களுக்கு சேவை செய்கின்ற துறை என்றால் அது மிகையாகாது. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 2 கோடியே 25 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அரசின் சார்பில் வழங்கப்படுகின்ற குடிமைப் பொருட்களை மாதந்தோறும் கொண்டு சேர்க்கும் பணியை தொடர்ந்து தொய்வின்றி செய்து கொண்டிருக்கிறது. இப்பணிக்காக 35,000க்கும் மேற்பட்ட நியாயவிலைக் கடைகள் இயங்கி வருகின்றது.

### சிறப்பான வங்கிச் சேவை!

முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்படுகின்ற சிறப்புத் திட்டங்கள், குறிப்பாக கொரோனா காலகட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டு கட்டங்களாக தலா ரூ.2000 என ரூ.4000ஐ, 21 தொகுப்புகள் கொண்ட மளிகைப் பொருட்களையும் இந்த துறையின் மூலம் மக்களிடத்தில் கொண்டுபோய் சேர்த்தோம். அது மட்டும் அல்லாது முதலமைச்சர் அவர்களால் ஆண்டுதோறும் அறிவிக்கப்படுகின்ற பொங்கல் தொகுப்புகளையும் மக்களிடத்தில் கொண்டுபோய் சேர்த்தோம். கிராமப்புறங்களில் வாழும் மக்களின் மேம்பாட்டிற்கான இத்துறையின் மூலம் சிறப்பான வங்கி சேவையும் வழங்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்துறையின் மூலம் விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க் கடன்களை கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி வருகிறது. 2006-2011 காலகட்டத்திலே முத்தமிழறிஞர் கலைஞர் பயிர்க்கடனை உரிய கெடு தேதிக்குள் திரும்பச் செலுத்தினால் அதற்கான வட்டித் தொகையினை செலுத்த தேவையில்லை என அறிவித்தார்கள். அந்த அறிவிப்பு தொடர்ந்து இன்றுவரை செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் மூலம் பயிர்செய்கின்ற காலங்களில் விவசாயிகள் கடன் தொல்லைகளில் மாட்டிக்கொள்ளாமல் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள்.

நலிந்த பிரிவினரான கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறுதொழில் செய்பவர்கள், நடைபாதை வியாபாரிகள் ஆகியோருக்கும் இத்துறையின் மூலம் கடன்களை வழங்கிக்கொண்டிருக்கின்றோம். மேலும். விவசாயிகளுக்கு கால்நடை வாங்குவதற்கும், கால்நடைகளை பராமரிப்பதற்கும் உரிய நேரத்தில் கடன்களை செலுத்தும் பட்சத்தில் வட்டியில்லா கடனும் வழங்கப்படுகிறது. இதன் மூலம் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அவர்களது நிதிச்சுமையினை சீராக வைப்பதற்கு இத்துறை செயல்பட்டு வருகிறது.

### கடன் வழங்கல் அதிகரிப்பு!

கடந்த 10 ஆண்டு ஆட்சி காலத்தில் ஆண்டு சராசரியாக ரூ.6.064 கோடி மட்டுமே பயிர்க் கடன் வழங்கப்பட்டது. ஆனால், தளபதி முதலமைச்சராக பெறுபேற்ற பின்னர், கூட்டுறவுச் சங்கங்களின் வரலாற்றில் முதல் முறையாக 2021-22 ஆம் ஆண்டில் பயிர்க் கடன் அளவு ரூ.10,000 கோடியை தாண்டி வழங்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து சென்ற ஆண்டு ரூ.12,000 கோடி பயிர்க் கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்தார்கள். அந்த இலக்கையும் தாண்டி ரூ.13,400 கோடி என்ற அளவில் பயிர்கடன் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ.16,500 கோடி பயிர்கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் மூலம் அந்த இலக்கினையும் நாங்கள் எட்டிவிடுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. கடந்த காலங்களை விட இந்த இரண்டரை ஆண்டு கால ஆட்சியிலே அனைத்து வகையான கடன்களும் இரண்டு மடங்கு அதிகமாகவே வழங்கி சாதனை படைத்துள்ளோம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

### ஊழியர்களின் அர்ப்பணிப்பு உணர்வு!

அதேபோல, தேசிய மயமாக்கப்பட்ட வங்கி, தனியார் வங்கி, பன்னாட்டு வங்கி என போட்டிகள் நிறைந்த இந்த வங்கி சேவையில் கூட்டுறவு வங்கியின் சேவைகளும் மக்களை வெகுவாக கவர்ந்துள்ளதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். வங்கிச்சேவையின் மூலம் வரவு செலவு இத்துறைக்கு ரூ.1,04,000 கோடி என்ற அளவிற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டை விட ரூ.30,000 கோடி அதிகமாகும். இதனையும் நாங்கள் சாதித்துக் காட்டுவோம். வங்கிச்சேவையில் நவீன பல யுக்திகளை நாங்கள் செய்து வருகிறோம். அவைகள் இன்னும் ஓரிரு மாதங்களில் அதன் பலன்கள் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் சென்றடையும். காலத்திற்கு ஏற்ப புதுப்பித்துக்கொள்ளும் துறையாக மட்டும் இல்லாமல், முதலமைச்சர் அறிவிக்கின்ற சிறப்புத்திட்டங்களை செயல்படுத்துவதிலும் உயர் அலுவலர்கள் முதல் கடைநிலை ஊழியர்கள் வரை அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட்டு வருகிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற அறிவிப்புகளைப் பொறுத்தவரையில் சென்ற நிதிநிலை அறிக்கையின்போது, முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலின்படி அறிவிக்கப்பட்ட 44 அறிவிப்புகளில் 40 அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. எஞ்சிய 4 அறிவிப்புகளுக்கும் இன்னும் ஒரு மாதத்திற்குள் செயலாக்கத்திற்கு வரும் என்பதை யும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது கூட இந்தியாவிலேயே கூட்டுறவுச் சங்கங்களின் கிடங்குகளை கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்திடம் (WDRA) பதிவு செய்தலில் தமிழ்நாடு முதலிடம் பெற்றது. அதற்கான கேடயங்களை ஒன்றிய அரசின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இது இத்துறையின் செயல்பாடுகளுக்கு கிடைத்த சான்றாகும்.

### சட்டத்திட்டங்களுக்குட்பட்டு பணியிடங்கள் நிரப்பல்!

**கேள்வி:** கூட்டுறவு வங்கிகளில் விவசாயக் கடன்கள் வழங்குவதைப் போல கூட்டுறவு வங்கிகளில் கல்விக்கடன்கள் வழங்கப்படுமா?

**பதில் :** விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பானவர்கள். அவர்களை காப்பாற்றும் நோக்கத்தில் தான் விவசாயக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக 2001-2006 காலகட்டத்தில் கடன் சுமையினால் விவசாயிகள் தற்கொலை அதிகமாக இருந்தது. வறட்சியும் நிலவியது. விவசாயத்தைப் பொறுத்த வரையில் மழை அதிகமாக பெய்தும் பாதிப்பை ஏற்படுத்தும், பெய்யாமலும் பாதிப்பு ஏற்படுத்தும் ஆகவே விவசாயம் தொடர்ந்து நடைபெற வேண்டும் கடன் சுமைகளில் மாட்டிக்கொள்ளக் கூடாது என்பதை உண்ர்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அறிவித்தார்கள். நீங்கள் கூறியதைப் போல கல்விக் கடன் வழங்குவதும் நல்ல யோசனைதான். இதுகுறித்து முதல்வர் அவர்களிடம் கலந்தாலோசித்து விரைவில் முடிவு எடுக்கப்படும்.

**கேள்வி :** கூட்டுறவு த்துறையில் தற்போது நேரடியாக இளநிலை உதவியாளர் பணியிடம் நிரப்பப்படுகிறது.

**பதில்:** துறையைப் றெறுத்த வரையில் நேரடி நியமனம், தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் நியமனம் என்பது தொடர்ந்து நடைமுறையில் உள்ள வழக்கமாகும். கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டுமில்லை எல்லா துறைகளி லும் வேலை வாய்ப்பினை வழங்க வேண்டும் என்பதில் முதலமைச்சர் உறுதியாக இருக்கிறார்கள். சமீபத்தில் கூட 33 பணியிடங்கள் TNPSC மூலம் நிரப்பப்பட்டது. நேரடி நியமனத்தில் கூட மாநிலம் முழுவதும் ஒரே நாளில் தேர்வு நடத்தி 85க்கு 15 என்ற மதிப்பெண்கள் அடிப்படையில் கூட்டுறவு சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு பணியிடங்கள் நிரப்பப்படும்.

**கேள்வி:** இந்தாண்டு பொங்கல் தொகுப்பில் கரும்பு இந்த வருடம் விவசாயிகளிட மிருந்து கொள்முதல் செய்யப்படுமா?

**பதில் :** இது குறித்து முதலமைச்சர் கலந்தாலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். பின்னர் அறிவிப்பு வெளியிடப்படும்.

### கோ-பஜார் செயலி மக்களிடம் நல்ல வரவேற்பு!

**கேள்வி :** கோபஜார் செயலி செயல்பாடுகள் எப்படி உள்ளது?

**பதில்:** கூட்டுறவுத்துறையின் மூலம் வெளியிடப்பட்ட இந்த செயலி மக்களிடத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இது போன்ற தனியார் செயலிகளுக்கு நிகராக இந்த செயலியினை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. அதேபோல அதில் Delivery Charge பொருட்களின் விலையை விட அதிகமாக உள்ளதாக தகவல் வரப்பெற்றது. அதனை குறைக்கும் வகையில் இன்றைய ஆய்வுக் கூட்டத்தில் கூட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஓரிரு மாதங்களுக்குள் இந்த செயலி மிகுந்த அளவில் மேம்படுத்தப்பட்டு பயன்பாட்டுக்கு வந்துவிடும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த செய்தியாளர் சந்திப்பின் போது, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் டாக்டர்.கே.கோபால்., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். ந.சுப்பையன். , சிறப்புபணி அலுவலர் (தமிழ்நாடு கூட்டுறவு வங்கி) எம்.பி.சிவன் அருள். (ஓய்வு) ஆகியோர் உடன் உள்ளனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட நாகராஜா கோவில் வடக்கு ரதவீதி, ஹென்றி தெரு, பூங்கா 2ம் குறுக்கு தெரு, மதர் தெரசா தெரு, சற்குண வீதி ஓடை குறிஞ்சி தெரு, மாதர் சங்க ரோடு 12வது குறுக்கு தெரு, கோவில்விளை, அஞ்சுகுடியிருப்பு – புதுக்குடியிருப்பு குறுக்கு சாலை ஆகிய பகுதிகளில் ரூ. 1.21 கோடி மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகள், இலுப்பையடி காலனி பகுதியில் ரூ. 1.60 இலட்சம் மதிப்பீட்டில் சப்பாத்து அமைக்கும் பணி, தளவாய்புரம் மெயின் ரோடு பகுதியில் ரூ. 2 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் ஓடை பக்கச்சுவர் அமைக்கும் பணி மற்றும் சிதம்பர வீதியில் ரூ.10.30 இலட்சம் மதிப்பீட்டில் அலங்கார தரைகற்கள் பதிக்கும் பணி ஆகிய பணிகளை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார்.

## நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில்

# ரூ. 1.35 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்டப் பணிகள் துவக்கம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார்!


குமரி, டிச. 1 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட நாகராஜா கோவில் வடக்கு ரதவீதி, ஹென்றி தெரு, பூங்கா 2ம் குறுக்கு தெரு, மதர் தெரசா தெரு, சற்குண வீதி ஓடை குறிஞ்சி தெரு, மாதர் சங்க ரோடு 12வது குறுக்கு தெரு, கோவில் விளை, அஞ்சுகுடியிருப்பு - புதுக்குடியிருப்பு குறுக்கு சாலை ஆகிய பகுதிகளில் ரூ. 1.21 கோடி மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகள், இலுப்பையடி காலனி பகுதியில் ரூ. 1.60 இலட்சம் மதிப்பீட்டில் சப்பாத்து அமைக்கும் பணி, தளவாய்புரம் மெயின் ரோடு பகுதியில் ரூ. 2 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் ஓடை பக்கச்சுவர் அமைக்கும் பணி மற்றும் சிதம்பர வீதியில் ரூ.10.30 இலட்சம் மதிப்பீட்டில் அலங்கார தரைகற்கள் பதிக்கும் பணி ஆகிய பணிகளை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் ஆனந்த் மோகன், துணை மேயர் திருமதி. மேரி பிரின்சி லதா, மாநகராட்சி பொறியாளர் பாலசுப்பிரமணியன், உதவி பொறியாளர் திருமதி. ராஜசீலி, இளநிலை பொறியாளர் ராஜா, மண்டல தலைவர்கள் திருமதி. அகஸ்டினா கோகிலவாணி, செல்வகுமார், முத்துராமன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. சொர்ணத்தாய், திருமதி. ரோஸிட்டா, திருமதி. சிஜி, திருமதி. சோபி, திருமதி. சந்தியா, செல்வலிங்கம், ரமேஷ், மாநகராட்சி தொழில்நுட்ப அதிகாரிகள் திருமதி. தேவி, பாஸ்கர், நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சரும் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் முன்பு கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர்கள் அணி சார்பில் பொதுமக்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் இனிப்புகள் வழங்கி, பட்டாசுகள் வெடித்து கொண்டாடப்பட்டது. விழாவுக்கு கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அன்புச்செழியன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் தி.மு.க. மாநில சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எம்.தண்டபாணி, பி.ஆர்.அருள்மொழி ஆகியோர் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினர். கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞர்கள் அணி நிர்வாகிகள், அரசு வழக்கறிஞர்கள் அருள்குமார், சிவக்குமார், கணேசன், கழக மூத்த வழக்கறிஞர்கள் ஜி.டி.ராஜேந்திரன், என்.கனகராஜ், எஸ்.ரவிச்சந்திரன், தமிழ்ச்செல்வி உள்பட பலர் திரளாக கலந்து கொண்டனர்.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பொன். குணசேகரன்

டிசம்பர் 1 (2021)



மாணவப் பருவத்திலேயே, மாணவர் அணியில் தன்னை இணைத்துக் கொண்ட இவர், என்.மோட்டூர் கிளைச் செயலாளர், நான்கு முறை மத்தூர் ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

மத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்று பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

சமூக சேவையாற்றியதன் காரணமாக ‘சமூக விருதுகள்’ பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.11.2023) சென்னை, ரிப்பன் மாளிகை, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, மழைநீர் வெள்ள பாதிப்பு தொடர்பாக கட்டுப்பாட்டு மையத்தை தொடர்பு கொண்ட பொதுமக்களிடம் தொலைபேசி மூலம் உரையாடி அவர்களது கோரிக்கைகளை கேட்டறிந்து, அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, துணை மேயர் மு.மகேஷ் குமார், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (30.11.2023) சென்னை, ரிப்பன் மாளிகையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில், கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்ற எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, துணை மேயர் மு.மகேஷ் குமார், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் எஸ்.ஏ.ராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல்துறை சார்பில்

# தஞ்சையில் புதிதாக அரசுக் கட்டடங்கள்!

## அமைச்சர் கே.என்.நேரு அடிக்கல் நாட்டினார்!

தஞ்சாவூர் , டிச.1 -

தஞ்சாவூர் மாவட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.22 கோடி 97 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பல்வேறு அரசுக் கட்டடம் மற்றும் புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு குடிநீர் வாரியம் மேலாண்மை இயக்குநர் வ.தட்சிணாமூர்த்தி, நகராட்சி நிர்வாக இயக்குநர் சு.சிவராசு மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், எஸ்.கல்யாண சுந்தரம், செ.இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன்(திருவையாறு), டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), க.அன்பழகன் (கும்பகோணம்), ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு வட்டம், திருவையாறு தேர்வுநிலை பேரூராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், மூலதன மானிய நிதி திட்டத்தின்கீழ் ரூ. 2 கோடி மதிப்பிலான ஈ.வெ.ரா. காய்கறி மார்க்கெட் கட்டடம் மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு. கருணாநிதி ஏலமையத்தினையும், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 1.5 கோடி மதிப்பிலான நவீன எரிவாயு தகன மேடை கட்டிடமும், ரூ. 20 இலட்சம் மதிப்பிலான “இளைஞர் திறன்வளர் மையம்” நூலகக் கட்டிடத்தினையும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் மாநகராட்சி தாராசுரம் வை.கோவிந்த சாமி அரசு மேல்நிலை பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூ.30 இலட்சம் மதிப்பிலான புதிய இரண்டு வகுப்பறைக் கட்டடமும், தாராசுரத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பிலான புதிய தாராசுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க கட்டடமும், அறிஞர் அண்ணா மேல்நிலைப்பள்ளியில் ரூ.1 கோடியே 44 இலட்சம் மதிப்பீட்டில் இயற்பியல் மற்றும் வேதியியல் ஆய்வகக் கட்டிடமும் மற்றும் 4 வகுப்பறை கட்டடமும், ரூ.1 கோடி மதிப்பீட்டில் காசிராமன் தெரு, பெசன்ட் ரோடு சந்திப்பில் உள்ளூர் வாய்க்கால் மீது சிறுபாலம் மற்றும் தாங்குசுவர் பணிகள் முடிந்த மையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு அவர்கள் திறந்து வைத்து கும்ப கோணம் மாநகராட்சிக்குட்பட்ட ரூ. 13 கோடி 98 இலட்சம் மதிப்பீட்டிலான ஓலைப்பட்டினம் வாய்க்கால் தூர்வாரி இருபுறமும் கரைகள் பலப்படுத்தும் பணியினை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் தாராசுரம் பேரூராட்சியில் ரூ.2.35 கோடி மதிப்பீட்டில் கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் 3க்கான அலுவலகக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு தலைமையில் நடைபெற்றது.

# சிவகங்கையில் ரூபாய் 3.50 கோடியில் 100 தினசரி சந்தை கடைகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பணிகளை துவக்கி வைத்தார்!

சிவகங்கை, டிச. 1-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை நகராட்சி சார்பில் தினசரி சந்தைக்கான கட்டிட பணிகள் துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி. ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது. கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 3 கோடியே 49 லட்சத்தில் 100 கடைகள் கட்டுவதற்கான பணிகளை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

இந்த தினசரி சந்தையில் கேண்டீன் வசதி, இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி, மற்றும் கழிப்பறை வசதியுடன் 100 கடைகள் கட்டப்பட உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் நகர்மன்ற தலைவர் துரை.ஆனந்த் வரவேற்றுப் பேசினார். நிகழ்ச்சியில் கோட்டாட்சியர் சுகிர்தா, மாவட்ட கழக துணைச் செயலாளர் கே. எஸ்.எம்.மணிமுத்து, நகர் மன்ற உறுப்பினர்கள் அயூப் கான், ஜெயகாந்தன், விஜயகுமார், சரவணன், கார்த்தி முருகேசன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், துணை அமைப்பாளர்கள் ராஜாஅமுதன், பி.முகமதுகனி, வழக்கறிஞரணி பாஸ்கரன், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து, மகளிர் அணி மஞ்சுளா, நகர் மன்ற துணைதலைவர் கார்கண்ணன் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் தனசேகரன் மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என்.ரவி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

நகர்மன்ற உறுப்பினர் அயூப்கான் நன்றி கூறினார்.

### இளைஞர்களின் எழுச்சி நாயகன் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெறும்

# 2வது மாநில இளைஞர்அணி மாநாடு இந்திய அளவில் பேசப்படும்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், டிச. 1-

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவின் பேரில் ஆத்தூர் தொகுதியில் திமுக இளைஞரணியின் 2வது மாநில மாநாட்டில் கலந்துகொள்வோர்களுக்கு இளைஞரணி சீருடை வழங்க பெயர் பட்டியல் தயாரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தி.மு.க. இளைஞரணியின் முதல் மாநாடு 2007ல் நடைபெற்றது அதன்பின்பு 16 ஆண்டுகளுக்குப் பிறகு சேலத்தில் தி.மு.க. இளைஞரணி மாநில மாநாடு தமிழகஇளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறும் என தி.மு.க. அறிவித்துள்ளது.

அதற்கான ஏற்பாடுகளை தமிழகம் முழுவதும் உள்ள தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் தீவிரமாக செய்து வருகின்றனர். ஆத்தூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினரும், மாநில துணைப்பொதுச்



செயலாளரும், தமிழக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி ஆலோசனைப்படி திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் உத்தரவின் பேரில் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்கழக நிர்வாகிகள் மற்றும் தி.மு.க. திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆத்தூர் கிழக்கு ஒன்றியம், ஆத்தூ மேற்கு ஒன்றியம், ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றியம், மற்றும் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராம ஊராட்சிகளில் உள்ள நிர்வாகிகள் சேலத்தில் நடைபெறும் 2வது மாநில தி.மு.க. இளைஞர் அணி மாநாட்டில் கலந்துகொள்ளும் இளைஞர் அணியினர் பட்டியலை தயார் செய்து வருகின்றனர்.

மாநாட்டில் கலந்துகொள்ளும் இளைஞர்களுக்கு தி.மு.க. இளைஞர்அணி சீருடை வழங்க அளவு எடுக்கப்பட்டு அதற்கான சீருடைகளும் தயாராகி வருகிறது. சேலத்தில் டிசம்பர் 17ம் தேதி இளைஞர்களின் எழுச்சி நாயகன் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறும் தி.மு.க. இளைஞர்அணி மாநாடு குறித்து ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கூறுகையில்,

கடந்த 2007ம் வருடம் நெல்லையில் முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற மாநாட்டிற்கு போற்றுதலுக்குரிய கழகத்தலைவரும், தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணி அமைப்பாளராக இருந்து தி.மு.க. இளைஞர் அணி மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி காட்டி தமிழக அரசியலில் பெரும் மாற்றத்தை கொண்டு வந்தார்.

அவர் வழியில் இன்று 16ஆண்டுகளுக்கு பிறகு டிசம்பர் 17ம் தேதியன்று சேலத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறும் இளைஞர் அணி மாநாடு பெரும் எழுச்சியை ஏற்படுத்தும் என்றார்.

கழக வரலாற்றில் 2007ம் ஆண்டிற்கு பிறகு 16 ஆண்டுகள் கழித்து மாபெரும் இளைஞர்படை கலந்துகொள்ளும் இளைஞர் அணி மாநாடு முத்திரை பதித்து இந்தியா அளவில் பேசப்படும் என்றார்.

ஆத்தூர் தொகுதியில் இளைஞர்கள் இளைஞர் அணி மாநாட்டில் பெரும் அளவில் கலந்துகொள்வதற்காக போட்டி போட்டுக்கொண்டு சீருடைக்கு முன்பதிவு செய்து வருவது குறிப்பிடத்தக்கது.



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் வருகிற டிசம்பர் 17ஆம் தேதி தி.மு.க.வின் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு நடைபெறுவதை ஒட்டி தமிழ்நாடு மாநாட்டின் ஒருங்கிணைப்பாளரும் தி.மு.க. முதன்மைச் செயலாளரும் தமிழ்நாடு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் தமிழ்நாடு கூடுதல் டி.ஜி.பி. அருண், கோவை சரக ஐ.ஜி ராஜேஷ் கண்ணா, சேலம் சரக டிஐஜி ராஜேஸ்வரி உள்ளிட்ட காவல்துறை அதிகாரிகள் மாநாட்டு பந்தல் திடல், அருகில் முதலமைச்சர் செல்லும் சாலையை ஆய்வு செய்தனர். இதில் மாநாட்டு திடலில் இருந்து ஏத்தாப்பூர் பேரூராட்சியிலுள்ள முருகன் கோவில் வழியாக செல்லும் சாலைகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர், உடன் சேலம் மாவட்ட ஆட்சியர் கார்மேகம், சேலம் மாவட்ட எஸ்.பி. அருண் கபிலன், சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் இரா.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. உள்பட பலர் உடன் இருந்தனர்.



முரசொலி பாசறை

சென்னை 1.12.2023

# திராவிட சினிமா

34

**■ வீ.மா.ச.சுபகுணராஜன்**

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

படங்கள் உதவி -:- ஞானம்







## 'நாடோடி மன்னன்' எழுப்பிய கோஷங்கள்!

திராவிட சினிமாக்களின் மாதிரியில் எம்.ஜி.ஆர் திரைப்படங்கள் ஒரு புதிய வகைமை எனக் கருதக் காரணமுள்ளது. அதிலும் குறிப்பாக 'நாடோடி மன்னன்' பலவகையிலும் கவனத்தைக் கோருவது. 1958 ஆம் ஆண்டில் வெளிவந்து மாபெரும் வெற்றி பெற்ற திரைப்படம். 'எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ்' சார்பாக அவரது அண்ணன் எம்.ஜி.சக்கரபாணியுடன் இணைந்து தயாரித்து, எம்.ஜி.ஆரே இயக்கிய திரைப்படம் 'நாடோடி மன்னன்'.

1954 இல் இருந்தே திராவிட முன்னேற்றக் கழக மேடைகளில் காணப்பட்டார் எம்.ஜி.ஆர். என்ற போதும் அவர் பிறரைப் போல முழுநேரச் செயல்பாட்டாளராக இருக்கவில்லை. 1952க்குப் பிறகு பரபரப்பான நடிகராகிவிட்ட நிலையில் அவரது நேர ஒதுக்கீடு அது தொடர்பிலானதாகவே இருந்தது. ஆனாலும் மாநாடுகள் போன்றவற்றில் பங்கேற்பதைத் தவிர்த்ததில்லை. 1957 ஆம் ஆண்டுத் தேர்தலில் பல பிரபலங்கள் தேர்தல் களம் கண்ட போதும் எம்.ஜி.ஆர் அந்தப் பட்டியலில் இல்லை. ஆனால் தேர்தல் பரப்புரைகளில் பங்கேற்றார் எனத் தெரிகிறது.

1958 ஆம் ஆண்டு வெளிவந்த 'நாடோடி மன்னன்' படத்தில் 'எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ்' சின்னமாக கருப்பு சிவப்பு தி.மு.க கொடி பட்டொளி வீசிப் பறந்தது. 1957 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அண்ணா தலைமையில் தி.மு.க தலைவர்கள் 15 பேர் வென்று தமிழ்நாட்டு அரசியல் களத்தில் அசைக்கவியலாத சக்தியாக காலூன்றிய போது, எம்.ஜி.ஆரும் தனது இருப்பை உறுதியாக்கிக் கொண்டார்.

### மேலோட்டமான வெளிநாட்டறிஞர் ஆய்வுகள்

இது வழக்கமான திராவிட சினிமா பாணியில் உருவான படம்தான். வெகுகாலமாக தமிழில் உருவான ராஜா ராணி திரைப்படங்களில் சொல்லப்பட்ட 'மன்னராட்சி ஒழிந்து மக்களாட்சி' உருவாகும் கதைக்களம்தான். இன்னும் சொல்லப் போனால் படத்தின் ஆரம்பக் காட்சியிலேயே மக்கள் 'மன்னராட்சி ஒழிக மக்களாட்சி மலர்க', 'வேலை கொடு', 'சோறு கொடு' எனும் கோரிக்கை அட்டைகளை ஏந்தி 'நாடோடி' தலைமையில் ஊர்வலம் வந்து கைதாகிறார்கள். நாடோடி சிறையிலடைக்கப்படுகிறான். வேடிக்கை, அவர் தலைமையேற்று நடத்தும் மக்களும் அமைப்பும் பின்னர் திரைப்படத்தில் காணப்படுவதில்லை.

பார்ப்பனத் துணையுடன் தமிழ்த் திரைப்படங்களை ஆராய்ச்சி செய்த வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஆய்வாளர்களில் பலர், கவனமாக எம்.ஜி.ஆர். திரைப்படங்களை மட்டும் தேர்வு செய்து, அந்தப் படங்களை, திராவிட சினிமா எனும் கருத்தியல் தொடர்ச்சியுள்ள திரைப்படங்களிலிருந்து தனித்த ஒன்றாகவே பார்த்தனர். அந்த ஆய்வின் நோக்கம் திராவிடச் சிந்தனைகள் திரைப்படங்கள் வழியாக மக்களிடம் சென்றடைந்த பன்மைத்துவமான போக்குகளுக்கு அவற்றின் உரிய பங்கைத் தர மறுப்பது. மறுபுறம் எம்.ஜி.ஆர். எனும் நடிகரை தனித்துவமான தி.மு.க கொள்கைப் பரப்புரை மூலவிக்கிரகம் ஆக்குவது.

இதன் முக்கியமான ஆபத்து என்னவெனில் எம்.ஜி.ஆர் எனும் நடிகர் மிக கவனமாக முழங்கிய ஆழமற்ற வெற்று கோஷங்களையே தி.மு.க.வின் கொள்கைத் தளமாகக் காட்டி, அது எத்தனை மேலோட்டமானது என்று தீர்ப்பெழுதுவது. ஜேம்ஸ் நார்ட்டன் என்ற *GLOBAL STUDIES, INDIA AND SOUTH ASIA* நூலின் ஆசிரியர், 'இந்தப் படம் எப்படி அடுக்குமொழியும், சண்டைக் காட்சிகளும் இணைந்து ஒரு ஒடுக்கப்பட்ட மக்களின் கதாநாயகனை உருவாக்குகிறது என்பதற்குச் சரியான உதாரணம்' என்கிறார். இந்தத் திரைப்படத்திலேயே தி.மு.க.வின் கொள்கைப் பிரகடனங்கள், செயல்திட்டங்கள் அனைத்தும் ஒரே காட்சியிலேயே பேசப்பட்டுவிடுகின்றன. அதற்குப் பின் எம்.ஜி.ஆர் எனும் நடிகரின் சாகசம் மட்டும்தான்.

### நீண்ட படப்பிடிப்பு

'நாடோடி மன்னன்' திரைப்படமும், வாரிசற்ற அரசொன்றுக்குப் புதிய அரசனொருவன் தேர்வாவதும், அவனை அரியணை ஏறவிடாமல் தடுக்கும் ராஜகுரு, தளபதி ஆகியோர் சதியில், சந்தர்ப்பமாக வேறு வழியின்றி மன்னனைப் போன்ற உருவ ஒற்றுமை கொண்ட நாடோடி, மன்னனாவதும்தான் கதைக்களத்தின் பிரதான முடிச்சு.

**ஆய்வாளர்களில் பலர் எம்.ஜி.ஆர் திரைப்படங்களை மட்டும் தேர்வு செய்து, அந்தப் படங்களை, திராவிட சினிமா எனும் கருத்தியல் தொடர்ச்சியுள்ள திரைப்படங்களிலிருந்து தனித்த ஒன்றாகவே பார்த்தனர்.**

எம்.ஜி.ஆர் திரைத்துறையில் நடிப்பு தவிர்த்த பல துறைகளில் நல்ல திறன் கொண்டவராக இருந்தார் என்பது பலரும் பதிவு செய்த தரவு. இந்தத் திரைப்படத்தையும் அவர் *PRISIONER OF ZENDA (1937) IF I WERE A KING (1938)* ஆகிய ஆங்கிலப் படங்களின் கதைக்களங்களிலிருந்து கண்டடைந்ததாகத் தெரிவித்திருக்கிறார். தான் தயாரித்து இயக்கும் படத்தில் இரட்டை வேடம் ஏற்பது என்பது ஒரு நடிகருக்கு மிக முக்கியமான தேர்வுதான்.

இந்தப் பல்வேறு கூறுகளே அந்தத் திரைப்படத் தயாரிப்பை இரண்டு ஆண்டுகளில், 200க்கும் மேலான நாட்கள் படப்பிடிப்பு நடத்தி முடிக்கும்படியானது என்கிறது தகவல். அதிலும் முதல் பாதி கறுப்பு வெள்ளையிலும், பின்னால் வரும் கன்னித்தீவுக் களம் கேவா கலரிலும் உருவாக்கப்பட்டது. இதன் பக்க விளைவாக நடிகை பானுமதி விலகல், சரோஜாதேவி அறிமுகம் ஆகியவை அரங்கேறின. வாள் சண்டைக் காட்சிகளே அநேகமாக ஒருமணி நேரப் படம்.

### அண்ணா கொடுத்த வாள்

நீளமான திரைக்கதை அமைப்பில் ஏற்படும் தொய்வை, ஓரளவு நேர் செய்வது எஸ்.எம். சுப்பையா நாயுடுவின் இசையிலான அற்புதமான பாடல்கள் என்றால் பிழையில்லை. அசலான திராவிட சினிமா செய்தி, படத்தின் தொடக்கத்திலேயே அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவிடுகிறது. நாடோடி அரியணை ஏறி, மக்களுக்கு நலத்திட்டங்கள், ஏழை எளியவர்க்கு வரிச்சலுகை, விவசாயத்துக்குக் கடனுதவி, கலப்புத் திருமண ஊக்குவிப்பு, அவர்களின் வாரிசுகளுக்கு அரசில் வேலை வாய்ப்பு எனப் பெரும்பான்மையான தி.மு.க திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்திவிடுகிறான்.

அதற்குப் பின்னரான திரைக்கதை முற்றிலுமாக எம்.ஜி.ஆர். எனும் நடிகருக்கானது. நாடோடி அரசனானாலும் மன்னனின் மனைவியிடம் பண்பாடு காத்து விலகி நிற்கிறான். ஒரு நிலையில் அவளிடம் உண்மையைச் சொல்லிவிட அவள் 'அண்ணா' என விளிக்கிறாள். நாடோடி, 'என்னை நம்புகிறாயா?' எனக் கேட்க அவள், 'நான் என்ன... இந்த நாடே உங்களைத்தான் நம்பி இருக்கிறது' என்கிறாள். அதே போல கன்னித் தீவில் காதலிக்கும் இளம் பெண்ணிடமும், 'எங்கள் பண்பாடு திருமணமாகாத ஆணும் பெண்ணும் அருகில் படுக்கக்கூடாது' எனப் பண்பாட்டு விளக்கம் நடக்கிறது.

ஏற்கெனவே உள்ள செய்திகளின்படி 'நாடோடி மன்னன்' வெற்றிக்காக அண்ணா அவர்கள் தலைமையில் வழங்கப்பட்ட 'தங்க வாளை' பின்னாளில் அவர் கொல்லூர் மூகாம்பிகை கோயிலுக்குக் காணிக்கையாகக் கொடுத்தார் எனத் தெரிகிறது. இது போதும், அவரது கொள்கைப் பிடிப்புப் பற்றி அறிய.! ஆம், 'நாடோடி மன்னன்' எம்.ஜி.ஆர்., தனக்காகத் திட்டமிட்டு உருவாக்கிய திராவிட சினிமாதான். இந்த மாதிரியை அவர் தொடர்ந்து வளர்த்தெடுத்த விதம் ஆர்வமூட்டுவது. அதை இனி வரும் படங்களில் பார்க்கலாம்.

...படம் விரியும்

## இந்திய மனங்களை வென்றவர்கள்

உத்தரகண்ட் மாநிலத்தில் சில்க்யாராவில் சுரங்க விபத்து ஏற்பட்டதும் வந்து நின்றவர் சுரங்கப் பணி நிபுணர் அர்னால்டு டிக்ஸ். ஆஸ்திரேலியரான இவர், சர்வதேச சுரங்கப் பணி கூட்டமைப்பின் தலைவராக இருக்கிறார். மீட்புப் பணிகள் நடைபெற்றபோது 24 மணி நேரமும் அங்கேயே மக்களுடன் இருந்தார். சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நம்பிக்கை அளித்ததுடன், ஊடகங்களுக்கும் அவர்தான் பதிலளித்தார். குறிப்பாக ஒரு தேசத்துக்கே நம்பிக்கை அளித்தார்.

அந்த மீட்புப் பணியின் இறுதிக் கட்டத்தில் பங்காற்றிய எலிவளைத் தொழிலாளர்கள் ஒரே நாளில் சாதனை நாயகர்களாகினர். எலி வளை சுரங்கப் பணி தடை செய்யப்பட்டிருந்தாலும், நெருக்கடியான நேரத்தில் இந்த முறையே கை கொடுத்துள்ளது. இந்தப் பணியில் ஈடுபட்டவர்களில் பெரும்பான்மையினர் இஸ்லாமியத் தொழிலாளர்கள்.

"உத்தரகண்ட் மாநிலத்தில் இருந்து இஸ்லாமியர்களை வெளியேற்ற வேண்டும் என வெறுப்புப் பேச்சை உமிழ்ந்தவர் அந்த மாநில பா.ஜ.க, முதல்வர் புஷ்கர் சிங் தமி. இப்போது களத்துக்கு வந்தது யார்?" என கேள்வி எழுப்பி இருக்கிறார் சி.பி.ஐ கட்சியைச் சேர்ந்த சுபாஷினி அலி.

இந்து-முஸ்லீம் தொழிலாளர்கள் இணைந்துதான் இதனை வெற்றிகரமாக முடித்தனர் என்றும் கூறியுள்ளார். இதுதான் இந்தியா! இந்த ஒற்றுமையை வலிமைப்படுத்துவோம் எனக் கொண்டாடுகின்றனர் மக்கள்.

## ::ப்ளாஷ்பேக்



### தேர்தலுக்கு மாநாட்டு நிதி!

தி.மு.கழகத்தில் 12 வயது இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றது முதல் இன்று வரை உழைத்து வருகிறேன். மின் கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தில் நான் மாநில அளவிலான பொறுப்பை அடைந்த போது, என் சகோதரர் ரத்தினசபாபதியுடன் இணைந்து, சங்கத்தின் நிதி மற்றும் உறுப்பினர்களை அதிகமாக்கி மாநில மாநாடு நடத்திடத் திட்டமிட்டோம். 2009 மக்களவைத் தேர்தல் காலம் என்பதால் மாநாட்டை ஒத்திவைத்து மாநாட்டுக்காக சேர்க்கப்பட்ட நிதியைத் தேர்தல் நிதியாக அப்போதைய பேரவைத் தலைவர் அண்ணன் செ.குப்புசாமி தலைமையில் பொறுப்பாளர்கள் பலரும் இணைந்து தலைவர் கலைஞரிடம் அளித்தபோது எடுத்துக்கொண்ட படம் இது.



கோவிந்தன்

**-வ.கோவிந்தன், மாநில முன்னாள் பொருளாளர், தமிழ்நாடு மின்கழக தொ.மு.ச., சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### மதிநுட்பமும் பிரச்சாரமும்

**1978 ஆம் ஆண்டு, ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வும், எதிர்க்கட்சியாக தி.மு.க.வும் எப்படிச் செயல்பட்டன என பத்திரிகைகள் அலசின. 'இந்தியா டுடே', 'சண்டே' போன்ற ஆங்கில ஏடுகள் கலைஞரின் ஆளுமையை உயர்த்திப் பிடித்தன. "நடிகர் திறமையாக நாடாள முடியும் என்பதை நிரூபிக்க முடியவில்லை. ஆனால் தி.மு.க தலைவரான கலைஞர் சட்டமன்றத்தில் மதிநுட்பமான தாக்குதல்களாலும், பொதுமக்களிடம் உள்ள நேர்த்தியான உறவு, பிரச்சாரம் ஆகியவற்றாலும் வெற்றிகரமான தலைவராக வெற்றி பெற்று இருக்கிறார்" என 'சண்டே' ஏடு புகழ்ந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

316




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131